

# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்

## தனி ஜெபத்தில் கலந்து கொண்ட பொழுது மாபெரும் சுகமளிக்கும் மருத்துவர் இயேசுகிறிஸ்து எங்கள் மகளின் தீராத இரத்த புற்றுநோயை சிலநாட்களிலேயே சுகமாக்கினார்!



என்னுடைய மகள் பெயர் ஜெனிஸா பியூலா. திடீரென்று அவளுக்கு இரத்த புற்று நோய் (A.L.L.) ஏற்பட்டது. மருத்துவர்கள் இந்த வியாதி சுகமடைவது கஷ்டம். அதிகமான பணச் செலவாகும். குழந்தைக்கு தொடர் மருத்துவ சிகிச்சை தேவை என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் மிகவும் பயந்து போனோம். பல இடங்களில் பரிசோதனை செய்தோம் (LEUKAEMIA) லுக்கேமியா என்று தான் கூறினார்கள். இந்த நேரத்தில் சகோதரன் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஐதராபாத் வந்திருந்தார்கள். தனி ஜெப வேளையில் அநேகருக்கு பொறுமையோடு தனி ஜெபம் ஏறெடுத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் மகளை கண்டதும் அன்போடு மகளை அணைத்துக் கொண்டு **"இயேசுவே இது என்னுடைய பேத்தி, இவளுக்கு இந்த இரத்த**

இதன் தொடர்ச்சி 19ம் பார்க்க

**- திரு. தேவானந்தம், ஐதராபாத்**

## பல வருட கொடிய பிசாசின் செய்வினை, மந்திர தந்திர கட்டுகள், போராட்டத்திலிருந்து இயேசுவால் பரிபூரண விடுதலை!



எங்களது வீட்டில் குடியிருந்தவர்கள் எங்கள் வீட்டை அபகரிக்க வேண்டுமென்று எங்களுக்கு செய்வினை, ஏவல் வைத்து விட்டார்கள். இதனால் நாங்கள் பல வருடங்களாக செய்வினை ஏவல் போராட்டத்தில் சிக்கி தூக்கமின்றி வாழ்ந்து வந்தோம். பல்வேறு இடங்களுக்கு சென்றும் விடுதலை கிடைக்கவில்லை. எங்களது நண்பர் அன்பரின் ஊழியத்தை பற்றியும், அதன்மூலம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சி பற்றியும் கூறினார்கள். அதன்படி ஒருநாள் ஆராதனா தெலுங்கு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியை பார்த்தோம். அப்பொழுது ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எங்கள் குடும்பத்தினர் ஐந்து பேரின் பெயரையும் சொல்லி, நாங்கள் படும் கஷ்டங்களை, வேதனைகளை துல்லிபமாக,**

இதன் தொடர்ச்சி 19ம் பார்க்க

**- திரு. சுதாராணி சகரியா, ஐதராபாத்**

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

ஞாயிற்றுக்கிழமைதோறும் இறைவனை தொழுதுகொள்வதற்கு ஓர் ஒப்பற்ற வாய்ப்பு! எந்த விதமான பாகுபாடின்றி, விருப்பமுள்ள அனைவரும் பங்குபெறலாம்!

## உங்களுக்காகவே இந்த விடுதலையின் ஆராதனை!

ஆராதனை நடைபெறும் நாள் : **அனைத்து ஞாயிற்றுகிழமைகள்**
ஆராதனை நடைபெறும் நேரம் : **காலை 9.30 முதல் 11.30 மணி வரை**
ஆராதனை நடைபெறும் இடம் : **டெலிவரன்ஸ் சர்ச்**
**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு,**
**தில்லைநகர், திருச்சி - 620 018.**

அலைபேசி எண் : 99421 66066, தொலைபேசி எண் : 0431 - 2765386
**e.mail : mydeliverancechurch@gmail.com**
**Website : www.mydeliverance.church**

**சமூக வலைதளங்களில் டெலிவரன்ஸ் சர்ச்-ன் மூன்று விதமான நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.**

- *வியாழன் தோறும் மாலை 6.00 மணிக்கு திருமறை பாடம்* (Bible Study)
- *வெள்ளி தோறும் மாலை 6.00 மணிக்கு* (Promise of the Week)
- *ஞாயிறு தோறும் காலை 9.30 மணிக்கு விடுதலையின் ஆராதனை ஆன்-லைன் மூலமாக நேரலை நிகழ்ச்சி* (Live Telecast) *(வயதானவர்கள், வெளியூர்களில் இருப்பவர்கள், குழந்தைகள் மற்றும் அனைவருக்காகவும்)*

**Rev.Dr. A. ஜாஷ்வா அவர்கள் வழங்கும் ஆசீர்வாதமான செய்திகள் மற்றும் இனிமையான பாடல்கள், ஆராதனைகள் அனைத்தையும் YouTube Channel, Facebook Page மற்றும் இணையதளத்திலும் பார்த்து ஆசீர்வாதம் பெறுங்கள்.**

Whatsapp No. 99446 66066
You tube Channel : My Deliverance Church
Face book Page : My Deliverance Church
Instagram : My Deliverance Church
Twitter : My Deliverance Church

ஆசீர்வாதமான தேவ செய்திகள் மற்றும் வல்லமையான ஜெபங்கள் அனைத்தும் உங்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தையும், விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் கட்டாயம் கொண்டு வரும்.

எனவே இன்றே @mydeliverancechurch
YouTube Channel ஐ subscribe பண்ணுங்கள்.
Facebook Page ஐ Like பண்ணுங்கள்
Instagram, Twitter ஐ Follow பண்ணுங்கள்

# அன்பரின் ஊழியம்

மலர் : 7 ◆ பிப்ரவரி 2021 ◆ இதழ் 2




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள் கூறி இந்த பத்திரிக்கையின் வாயிலாக உங்களோடுகூட பேச விரும்புகிறேன்.

நம் தேவாதி தேவன் நம்மோடு துணை நிற்க நாம் இந்த 2021ஆம் ஆண்டின் இரண்டாம் மாதத்திற்குள்ளாய் கடந்து வந்திருக்கிறோம். நம் தேசம் முழுவதும், உலகமெங்கிலும் அநேக மக்கள் பாடுபட்டு கொண்டிருக்கும் சூழ்நிலைகளை நாம் காண்கிறோம். விசேஷமாக உலகமெங்கிலும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அவர்களுடைய விசுவாசத்தின் நிமித்தம் பலவிதங்களில் துன்பங்களை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள். **எந்த வருடமோ, மாதமோ, தேதியோ எல்லா நாட்களிலும் அவர்கள் சிந்துவது தங்களது கண்ணீரையும், இரத்தத்தையும் தான்.** ஆனால் இவற்றின் மத்தியிலேயும் இப்படிப்பட்ட நம்முடைய சகோதர, சகோதரிகள் தங்கள் விசுவாசத்தை ஒரு நாளும் விட்டுக் கொடுக்கிறதும் இல்லை, மறுதலிக்கிறதும் இல்லை. ஒவ்வொரு நாளும் உங்கள் ஜெபங்களில் பாடுபடும் கிறிஸ்தவர்களை நினைத்து ஊக்கமாய் அவர்களுக்காக ஜெபியுங்கள். **நம்முடைய ஜெபங்களே அவர்களை தாங்கி சுமந்து செல்லும் ஆயுதம்.**

வரப்போகிற நாட்களில் நடைபெறும் பள்ளிக்கூட தேர்வுகளை எழுதும் பிள்ளைகளுக்காக நாம் ஜெபிப்போம். கடந்த வருடம் முழுவதும் ஆன்லைன் மூலமாக மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் படித்த பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தங்கள் எதிர்காலத்தை நன்கு அமைத்துக்கொள்ள தேவன் துணைபுரிய வேண்டுமென்று ஜெபிக்கிறோம். கர்த்தர் மனமிரங்கி உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் நல்லதொரு எதிர்காலத்தை ஆசீர்வதித்து தருவாராக. **படிக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அவர்களுடைய தேர்வு எண் மற்றும் ஜெப குறிப்புகளை எங்களுக்கு தொலைப்பேசி, வாட்ஸ்அப், டெலிகிராம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.**

கடந்த நாட்களில் தேவன் நமக்கு துணைபுரிந்து கூட்டங்களை நடத்த உதவி செய்தமைக்காக அவரை துதிக்கிறோம். ஒரு வேளை பெரும் கூட்டமாக நடக்கா விட்டாலும் இந்த நாட்களில் அநேக மக்களை சந்தித்து


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.mojworld.org & www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

அவர்களுக்காக ஜெபிக்கும்படி தேவன் அநுக்கிரகம் செய்தார். ஆம் பிரியமானவர்களே! நாட்கள் செல்ல செல்ல சுவிசேஷத்தை அறிவிக்கும் முறைகள் மாறிக் கொண்டிருக் கிறதை நாம் பார்க்கிறோம். பல வருடங்களுக்கு முன்பு துண்டு பிரதிகள், பத்திரிக்கைகள், புத்தகங்கள், மிகப்பெரிய கூட்டங்கள் போன்ற வற்றின் மூலம் சுவிசேஷத்தை அறிவித்தோம். ஆனால் இப்பொழுதோ சமூக ஊடகங்கள் மூலமாக அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க முடிகின்றது. எனவே நீங்களும் ஊக்கமாக இந்த காரியத்திற்காக ஜெபியுங்கள், முயற்சி எடுங்கள். **அப்போஸ்தலர் 17, 18 அதிகாரங்களை வாசிக்கும் பொழுது அங்கே பவுல் கிரேக்கர் களின் மத்தியிலும், யூதர்களின் மத்தியிலும் பலவிதங் களில் சுவிசேஷத்தை பிரகடனப் படுத்தினார். சிலருக்கு திருஷ்டாங்கப் படுத்தினார் (Prove and explain) சிலருக்கு புத்தி சொன்னார் (Reasoned). சிலருடன் பலமாய் தர்க்கம் பண்ணினார் (Debated). சிலரிடம் பிரசங்கித்தார் சிலருடன் சம்பாஷணை பண்ணினார் (Conversation). எப்படியோ சுவிசேஷத்தை அறிவிப்பதே அவருடைய தலையாய நோக்கமும், எண்ணமுமாய் இருந்தது. இதுவே நம்முடைய எண்ணமாகவும், மூச்சாகவும், நம்முடைய லட்சியமாகவும் இருக்க வேண்டும்.** தேவன் நமக்கு செய்த எல்லாவற்றிற்காகவும் நாம் என்னத்தை செலுத்துவோம். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்வோம். சுவிசேஷத்தை அறிவிக்காவிட்டால் நமக்கு ஐயோ! உலகம் மாயையான காலங்களுக்குள் சென்றாலும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையின் நேரத்தில் நிச்சயமாகவே பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிரப்பப் பட்டிருக்கும். அதற்கு நீங்களும், நானும் ஒரு கருவியாக இருப்போம். தொடர்ந்து பல கிராமங்கள், குக்கிராமங்கள், சுவிசேஷம் சென்றடையாத பகுதிகளுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவிக்க ஆட்கள் தேவைப்படு கிறார்கள். உங்களால் இயன்றவர்கள் இதற்கு எங்களுக்கு உதவ ஒத்துழைப்பு தர கேட்டுக் கொள்கிறோம்.

SJ Saves Trust சார்பாக அநேக குழந்தை களுக்கும், திக்கற்றவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டது. கிராமப்புற மருத்துவமனையிலும் அநேகர் தங்களுடைய நோய்களுக்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். தொடர்ந்து இந்த ஊழியங்கள் விரிவாக்கப்பட ஜெபியுங்கள்.

கடந்த மாதங்களில் தேவன் நல்ல மழையை கட்டளையிட்டதற்காக அவரை துதிப்போம். **காலம் தவறி வந்த இந்த மழையின் நிமித்தம் கஷ்டப்படும் விவசாயி களுக்கு கர்த்தர் தாமே உதவி செய்வாராக.** நீங்கள் இழந்தது எல்லாவற்றையும் தேவன் இரட்டிப்பாக தந்து உங்களை சந்தோஷப்படுத்து வார். தொடர்ந்து இன்னும் சில மாதங்களில் நடக்க இருக்கின்றதான தேர்தல்களுக்காக

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

RAKSHANA TV — சனி இரவு 8.30 – 9.00

ARADANA TV
புதன் மாலை 6.00 – 6.30
சனி மதியம் 2.30 – 3.00

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி
இரவு 07.30 – 08.00

**ஆங்கிலத்தில்**

GOODNEWS TELEVISION
வியாழக்கிழமை
இரவு 8.30 – 9.00

ஜெபிப்போம். **அஸ்ஸாம், கேரளா, புதுச்சேரி, மேற்குவங்காளம் மற்றும் தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தல்களில் தேவன் தமக்கு சித்த மான மக்களை தேர்ந்தெடுக்க ஜெபிப்போம்.**

அன்பரின் ஊழியத்திற்காக, எங்களுடைய குடும்பத்திற்காக மறவாமல் உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள். உங்களில் ஒருசிலர் ஊழியங்களுக்கோ அல்லது SJ Saves Trust-ற்கோ காணிக்கை கொடுக்க விரும்பியும் செலுத்த வழியில்லை என்று நினைப்பீர்கள் என்றால் எங்களை தொடர்புகொள்ளலாம். நாங்கள் எங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி அதை பெற்றுக்கொள்வோம்.

இந்த மாதம் முழுவதும் தேவன் தாமே உங்கள் அனைவரையும் சுகத்தோடு, சமாதானத் தோடு, தம்மை பற்றும் விசுவாசத்தில் குன்றிப் போகாமல் காத்துக்கொள்வாராக!

**இம்மாத வாக்குத்தத்தம்**
**மாற்கு 10:52**
**ஏசாயா 37:31, 32,35**
**சங்கீதம் 17:5**

# இதயம் தொட்ட எண்ணம்

**உங்கள் வேதனைகள் உங்களை தேவனிடத்தில் அல்லது சாத்தானிடத்தில் நெருக்கமாக்கும்.
தெரிந்தெடுக்கும் முடிவு உங்கள் கரத்தில்.**

**Your sufferings can take you closer to God or the devil.
The choice is yours.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# திரும்ப அழைத்து உங்களை உயர்த்துவார்

தேவசெய்தி: Dr. ஜேன் ஜாஷ்வா

**என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**
**நான் காணாமற்போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன்; நியாயத்துக் குத்தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன்**

**- எசேக்கியேல் 34 : 15, 16**

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

எசேக்கியேல் தீர்க்கதரிசன புத்தகம் உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி மிக அதிகமான தேசங்களை குறித்ததான சாபங்களையும், தீர்க்கதரிசனங்களையும் உடையதாகும். குறிப்பாக இப்புத்தகத்தின் 34ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்பொழுது அந்த அதிகாரம் முழுவதும் இஸ்ரவேல் தேசத்தை மேய்க்கும் மேய்ப்பர்களுடைய அவல நிலையை குறித்தும், அவர்களுக்கு தேவன் தரும் தண்டனையை குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது. மேய்ப்பர்கள் செய்த கொடுமையின் நிமித்தம் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை தாமே மேய்த்து அவர்களுக்கு மேய்ப்பனாக இருப்பேன் என்று சொல்கிறார்.

சர்வ வல்ல தேவன் துக்கத்தோடு எசேக்கியேலிடம் **"என்னுடைய ஜனங்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளை போல இருக்கிறார்கள். அவர்கள் மேய்ப்பர்களே அவர்களை கொள்ளையாடிக் கொண்டிருக்கிறார்கள்"** என்று கூறுகிறார். **எசேக்கியேல் 34:2**ஆம் வசனத்தில் **"மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்ன வென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்லுகிறார்; தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்க வேண்டும்"** என்று எழுதப்பட்டுள்ளது.

அந்த ஜனங்களை நடத்துகிற தலைவர்கள், அதிபதிகள், அவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், இவர்களைப் பார்த்து கர்த்தர் **"நீங்கள் நல்ல மேய்ப்பர்களாக இல்லை, நீங்கள் அதற்கு நேர்மாறாக என்னுடைய ஜனங்களை மிகக்கொடூரமான வழியில் நடத்துகிறீர்கள்"** என தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

**நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கொடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள் - எசேக்கியேல் 34: 4**

மேய்ப்பர்கள் இவ்வளவு கொடூரமாய் ஆண்டதினாலே கர்த்தர் அந்த ஜனங்கள் மீது பரிதாபப்படுகிறார். இந்த என்னுடைய ஜனங்கள் திரும்ப என் தேசத்திற்கு வரும் பொழுது அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளை போல இருக்கக் கூடாது. ஆகவே, **"என் ஆடுகளை**

**நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன்"** எனக் கூறுகிறார். மடக்குவேன் என்று சொல்லும்பொழுது, ஆடு மேய்க்கிற மேய்ப்பன் எல்லா ஆடுகளையும் சேர்த்துக் பட்டியில் ஒரு இடத்தில் ஆடுகளை எல்லாம் சேர்த்து வைப்பது தான் மடக்குவது என்று அர்த்தம். இந்த ஆடுகளுக்கும், நமக்கும் என்ன சம்பந்தம் பிரியமானவர்களே! இப்பொழுது நாமும் இப்படித்தான் இருக்கின்றோம். சிதறடிக்கப்பட்ட, கஷ்டப்படுகிற ஆடுகளை போலத்தான் இருக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்களை நடத்தினவர்களாலும் நிம்மதியில்லை, உலகத்தில் அவர்கள் தேடின எல்லாவற்றினாலும் நிம்மதியில்லை. ஆகவே **"நானே அவர்களுக்கு மேய்ப்பனாக இருப்பேன்"** என்று கர்த்தர் சொல்கிறார். **சங்கீதம் 23:1ல்** தாவீது **"கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சி யடையேன்"** என்று சொல்கிறார். தாவீது ஒரு மேய்ப்பனாய் இருந்தபடியால் தேவன் சொன்ன இந்த காரியத்தினுடைய முக்கியத்துவம் தெரியும். நானே அவர்களை மேய்ப்பேன்!

**நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,**

**நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டு மிருக்கி றேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் - யோவான் 10 : 14, 15**

அதே சமயத்தில் தன் ஆடுகளுக்காக ஜீவனை கொடுக்கும் இந்த நல்ல மேய்ப்பன் இன்றைக்கு உங்களை பார்த்து **"நீங்கள் என்னுடைய ஜனங்கள், நான் உங்களுடைய தேவன்" (எசேக்கியேல் 34:31)** என வாக்குக் கொடுக்கிறார். நல்ல மேய்ப்பனாகிய இந்த தேவனாகிய கர்த்தர் இந்த வருடத்தில் எப்படி நம்மை நடத்தப் போகிறார்? அது தான் வாக்குத்தத்தம் பிரியமானவர்களே **எசேக்கியேல் 34:16ல்** மிக அருமையாக, விவரமாக தீர்க்கதரிசி சொல்கிறார். ஆடுகளை மேய்ப்பேன் என்று சொல்லும்பொழுது, அவர் என்னை நடத்துவார், அவர் என் தேவைகளை சந்திப்பார், அவர் எனக்கு எப்படி எல்லாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ கொடுப்பார் என்று மாத்திரம் நாம் நினைக்கிறோம். இன்னும் மிக முக்கியமாக 16ம் வசனத்தில் **"நான் காணாமற் போனதை தேடி, துரத்துண்டதை திரும்ப கொண்டு வந்து"** எனத் தெளிவாக எழுதப் பட்டுள்ளது.

## காணாமற்போனவைகளை தேடுவார்!

அன்பானவர்களே! காணாமற்போனதை கர்த்தர் ஏன் தேட வேண்டும்? நாம் இப்பொழுது காணாமற் போய் விட்டோமா? நாம் எல்லாம் ஆடுகள் தானா? என்று நீங்கள் நினைக்கலாம். ஆடுகள் காணாமல் போவதற்கு வாய்ப்பு உள்ளது. எப்படி? ஆடுகள், சில நேரங்களிலே இங்கு பச்சையாக உள்ளதே, அங்கு பச்சையாக உள்ளதே என்று கூட்டத்தை விட்டு, மேய்ப்பர்களின் சத்தத்தைவிட்டு தானாக விலகி போய்விடுவதுண்டு. ஆபத்து இருக்கிறது என்று தெரியாமல் இந்த ஆடுகள் மேய்ச்சலை தேடி போக ஆரம்பித்துவிடும். அப்படி தேடி போகும்பொழுது அவைகள் காணாமல் போய் விடுகிறது. மேய்ப்பனுடைய கண்காணிப்பி லிருந்து அவைகள் காணாமல் போய்விடுகிறது. அப்படி காணாமல் போவது எப்படி கர்த்தருக்கு தெரியும், நிச்சயமாய் தெரியும். **லூக்கா 15:3 முதல் 6** வசனங்களில் இயேசு கூறுவது போல ஒரு மேய்ப்பன் நூறு ஆடுகளை உடையதாக இருந்தும் அவைகளில் ஒன்று காணாமல் போனால் கூட 99 ஆடுகளையும் விட்டுவிட்டு அந்த ஒரு ஆட்டைத் தேடி செல்வான். அந்த ஆட்டை திரும்பவும் கொண்டு வந்து, காணாமல் போன ஆடு கிடைத்துவிட்டது, நான் தேடி கண்டு பிடித்துவிட்டேன் என்று தன்னுடைய அயலகத்தார், தன்னுடைய உறவினர்கள் எல்லாரையும் அழைத்து சந்தோஷத்தோடு கொண்டாடுவானாம். சாதாரண ஒரு மேய்ப்பனுக்கு தன் ஆடுகளை பற்றி தெரியும் பொழுது, நம்முடைய மேய்ப்பராகிய சர்வவல்ல தேவனுக்கு நாம் காணாமல் போவது நிச்சயம்

தெரியும் அல்லவா? அவர் நிச்சயம் தேடுவார், பல துன்பங்களை சந்தித்தபடியினால் உங்களில் அநேகர் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் சோர்ந்து போய் இருப்பீர்கள்.

ஒரு சகோதரி என்னிடம் **"சகோதரியே எனக்கு வந்தது எல்லாம் கஷ்டம், கண்ணீர், 2020ஆம் ஆண்டிலே நான் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடந்து சமாதானமற்ற நிலையில் இருக்கிறேன், இப்படி நான் இருப்பதால் எனக்கு வேதத்தை படிக்க தோன்றவில்லை, ஜெபிக்க முடியவில்லை, நான் இரட்சிக்கப்பட்ட புதிதில் ஜெபம் பண்ணியது போல இப்பொழுது என்னால் ஜெபிக்க முடியவில்லை"** என்று கண்ணீரோடு கூறினாள். ஆம், உபத்திரவங்களும், பாடுகளும், உலகக் கவலையும் நம்மிலிருந்து தேவ வசனத்தை எடுத்துப் போடுகிறது. எனவே நாம் கர்த்தருடைய மந்தையை விட்டு விலகிப் போகிறோம். அநேகர் சரியான வழி நடத்துதல் இல்லாமல், சமாதானம் இல்லாமல் வீட்டிற்குள்ளேயே இருந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கலாம். கலங்காதீர்கள்! வேதம் சொல்கிறது **"கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்" (சங்கீதம் 1:6)** உங்களை அறிந்திருக்கிற தேவன் காணாமல் போன உங்களை தேடி நிச்சயம் வருவார். **"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10)** என்று வேதம் கூறுகிறது.

**ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.**

**இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது ஏசாயா 45: 15,16**

**நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிற வருமாயிருக்கிறீர்; என் தேவனே, தாமதியாதேயும் - சங்கீதம் 40 : 17**

நீங்கள் எந்த இடத்தில் பாதை தவறிப் போய் இருக்கிறீர்கள் என்று கர்த்தருக்கு தெரியும். எந்த முள்ளில் நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவருக்குத் தெரியும். எந்த உயரத்தில் இருந்து விழப் போகிறீர்கள் என்றும் அவருக்கு தெரியும். ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்றாகத்தான் இருக்கிறேன், நான் ஒரு நாளும் கர்த்தரை மறுதலிக்கவில்லை என்று நீங்கள் கூறலாம். **ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் நன்றாக நடந்தாலும், உங்களுடைய நோக்கத்தையும், உங்கள் வாழ்க்கையின் லட்சியத்தையும் விட்டுவிட்டு ஓடியிருக்கலாம். ஊழியம் செய்கிற ஊழியக் காரர்களே, இந்த நாட்களில் ஊழியத்தில் மிகவும் சோர்ந்து இருக்கின்றீர்களா? கர்த்தர் நிச்சயமாக இன்றைக்கு காணாமல் போன ஆட்டைப் போல இருக்கிற உங்களை திரும்ப மீட்டுக் கொண்டு வருவார். உங்கள் அழைப்பின், அபிஷேகத்தின், இரட்சிப்பின் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை விட்டு தூரமாய் ஓடிப் போகாதீர்கள். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த அந்த நோக்கத்தை நிறை வேற்றும் அளவிற்கு தேவன் நிச்சயமாய் உங்களை தேடிக் கொண்டு வருவார். கொண்டு வந்து உங்களை நிலைநிறுத்தி உங்களை பார்த்து சந்தோஷப்பட்டு உங்களில் களிகூருவார்.**

## துரத்துண்டதை திரும்ப கொண்டு வருவார்

காணாமல் போவதற்கும், துரத்துண்டு போவதற்கும் என்ன வித்தியாசம்? காணாமல் போவது என்றால் தாங்களே வழி விலகி போவது; துரத்துண்டு போவது என்றால் யாராவது துரத்துவது, பயமுறுத்துவதாகும். ஒரு ஆடு பயந்து, வழிவிலகிப் போனால் அதன்பின்னால் எல்லா ஆடுகளும் போக ஆரம்பித்துவிடும். அதேபோலத் தான் இங்கே நாமும், நம் வாழ்க்கையில் சில சமயங்களில் வருகின்ற போராட்டங்கள், பிரச்சனைகளினால், பிசாசினுடைய கிரியைகளுக்கு பயந்து ஓடிப் போய்விடுகிறோம், துரத்துண்டு போகிறோம். ஏதாவது ஒரு பிரச்சனை நம்மை தேவனுடைய சமூகத்திலிருந்து விலகி போகச் செய்கிறது.

மந்தையிலிருந்து நம்மை துரத்தி விடுகிறது. ஒருவேளை மற்ற மனுஷர் நம்மை பார்த்து கிண்டல், கேலி செய்யும்பொழுது, குடும்பத்தார் நம்மை ஏற்றுக்கொள்ளாத பொழுது நாம் துரத்துண்டவர்களாய் மாறிவிடுகிறோம். இந்த துரத்துண்ட இஸ்ரவேலரை திரும்ப கொண்டு வருவேன் என கர்த்தர் கூறுவது போல உங்களையும் அவர் தேடி வருவார்.

அநேக சமயங்களில் பாரம்பரியங் களினாலே, கலாச்சாரங்களினாலே, ஏற்றத் தாழ்வுகளினாலே, குடும்ப பின்னனிகளினாலே மனுஷர் துரத்தப்படுகிறார்கள். இப்படி பல விதங்களில் அநேகர் தங்களது நிலையைவிட்டு துரத்தப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். ஆம் பிரியமானவர்களே! நாம் எவ்வளவு பயங்கர மான, கொடூரமான உலகத்தில் இருக்கிறோம். பலர் தங்கள் சொந்த பந்தங்களை விட்டு, எல்லாவற்றையும் விட்டு போய்விடுவதை நாம் பார்க்கிறோம். பல சமயங்களில் நமது தொழிலில், படிப்பில், நம்முடைய வாழ்க்கையில் எல்லா இடத்திலிருந்தும் நாம் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளமுடியாதபடி துரத்திவிடப் படுகிறோம். அந்த சமயங்களில் எல்லாம் **"நான் உன்னை தேடி, கொண்டு வருவேன்"** என்று கர்த்தர் சொல்கிறார். சீஷர்கள் தங்களுக்கு இருக்கிற நோக்கத்தை, அழைப்பை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இயேசுவின் மரணத்திற்கு பின்பு பயந்து போயிருந்த சீஷர்கள் அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடும் கூட அந்த பயத்திலிருந்து மீளவில்லை. மாறாக, **யோவான் 21: 1 முதல் 4ல்** நாம் படிக்கிறது போல மீன் பிடிக்கப் போகிறேன் என்று பேதுரு சொல்கிறார். அவரை தொடர்ந்து மற்ற அனைத்து சீஷர்களும் அவரோடு உடன்பட்டு இயேசு தங்களை அழைத்த அழைப்பையும் மறந்து மீன் பிடிக்க செல்கிறார்கள். மீன் பிடித்துக் கொண்டிருந்த வர்களை தான் **"நான் உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன்"** என்று இயேசு கிறிஸ்து அழைக்கிறார். ஆனால் இங்கேயோ அவர்கள் பயத்தினால் தங்கள் அழைப்பிலிருந்து துரத்திவிடப்படுகிறார்கள். அச்சமயத்திலே கர்த்தர் இயேசு அங்கே காட்சியளிக்கிறார்.

**"விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்"** என்று வேதம் கூறுகிறது. மீன்கள் வறுக்கப்பட்டு அவர்களுக்காக தயாராக இருந்தது. அவர்தான் இயேசு என்றும், எஜமான் என்றும் அவர்கள் அறியவில்லை. பக்கத்தில் வரும் பொழுதுதான் அவர் கர்த்தர் என்று அறிந்து அவர்கள் எல்லோரும் அங்கே கூடி சேர்ந்தார்கள். அங்கே முதலில் மீன்பிடிக்க சென்ற பேதுருவை கர்த்தர் திடப்படுத்துகிறார். அவர் திரும்பவுமாக தம்முடைய ஜனங்களை கூட்டி சேர்க்கிறது போல சீஷர்களை, அப்போஸ்தலர்களை கூட்டி சேர்த்தார். அதன் பிற்பாடு தான், அவர்கள் வல்லமையாக பயன்படுத்தப்படுகிறார்கள். புதிய மனுஷர்களாக மாற்றப்பட்டார்கள். இதுபோன்ற சம்பவங்கள் நமக்கு நடக்கும் பொழுதும் ஆவிக்குரிய விதத்திலே, மாம்சப் பிரகாரமாக, உலகப் பிரகாரமாக நாமும் துரத்தப் படுகிறோம். நம்முடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளாதவாறு பிசாசு நமக்கு தடையாக இருக்கிறான். அப்படிப்பட்ட நேரங்களில் கர்த்தர் நம்மை தேடி வருகிறார்.

**வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத்தரும்; பூமி தன் பலனைக் கொடுக்கும்; அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள்; நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்.**

**இனி அவர்கள் புறஜாதிகளுக்குக் கொள்ளை யாவதில்லை, பூமியின் மிருகங்கள் அவர்களைப் பட்சிப்பதுமில்லை; தத்தளிக்கப் பண்ணுவார் இல்லாமல் சுகமாய்த் தங்குவார்கள் - எசேக்கியேல் 34 : 27, 28**

உங்களை கட்டி இருக்கிற எல்லா நுகத்தின் கயிறுகளை அவர் அறுத்து, அடிமை கொண்டவர்களின் கைக்கு உங்களை நீங்கலாக்கி, தத்தளிக்கப் பண்ணுவாரில்லாமல், சுகமாய் தங்கப்பண்ணுவார். சத்துருவின் போராட்டம், பிரச்சனைகள் அதிகமாய் உங்கள் வாழ்க்கையில் இருக்கலாம். அதனால் ஒடி ஒளிந்து கொண்டு, பயந்து கொண்டு இருக்கலாம். என் வாழ்க்கையில் ஆசீர்வாதம் வராதா?

கடன்காரர்களின் சுமை என்னை அழுத்துகிறதே, கணவருடைய கொடுமை என்னை அழுத்து கிறதே, என்னால் வெளியில் போய் பிரசங்கம் பண்ண முடியாமல் போய்விட்டதே, குடும்பத்தின் சூழ்நிலை என்னை பின்னால் இழுக்கிறதே, நான் குடும்பத்திற்கு என்ன செய்வேன், என்னுடைய மனைவிக்கு என்ன செய்வேன், பிள்ளைகளுக்கு என்ன செய்வேன், இப்படி போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கை என்னை கயிறுகளை போல கட்டி வைத்திருக்கிறதே என்று நீங்கள் சொல்லலாம். சோர்ந்து போகாதீர்கள் **"இன்றைக்கு அந்த நுகங்களை முறித்து, துரத்தி விடப்பட்ட இடத்திலிருந்து உங்களை கொண்டு வந்து, சந்தோஷப்படுத்தி, உங்களைசுகமாய் தங்கப் பண்ணுவேன்"** என்று உங்களை பார்த்து கர்த்தர் உரைக்கிறார்.

**யோசேப்பு** தன்னுடைய வீட்டிலிருந்தும், குடும்பத்திலிருந்தும், தனக்கு கர்த்தர் வைத்திருக்கிற ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் துரத்தப்பட்டான். **தாவீது** தான் அபிஷேகம் பண்ணப்பட்டவனாய் இருந்தும் கூட அவனுடைய நிலையிலிருந்து, அவன் தேசத்திலிருந்து துரத்தப்படுகிறான். கர்த்தாவே எப்படியாவது தேவனுடைய ஆலயத்தை பார்க்க முடியாதா? பெத்லகேமின் கிணற்றிலிருந்து நான் தண்ணீர் குடிக்க முடியாதா என தாவீது ஏங்குகிறதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

**ஆபிரகாம்** தன் தேசத்தைவிட்டு துரத்தப் படுகிறான். தேவன் இப்படிப்பட்ட நபர்களுக்கு தாம் குறித்து வைத்திருக்கிறதை நிறைவேற்று வதற்காக அவர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் மேல் கண்ணோக்கமாய் இருந்து தாம் ஆயத்தப்படுத்தின ஸ்தானத்திற்கு அவர்களை திரும்ப கொண்டு வந்து உயர்த்துவதை நாம் பார்க்கிறோம். **லூக்கா 15:24ம்** வசனத்தில் கெட்ட குமாரனை குறித்து அவன் தகப்பன் **"அவன் காணாமல் போனான், இப்பொழுது திரும்ப வந்திருக்கிறான், அவன் மரித்தான் இப்பொழுது உயிரோடு இருக்கிறான்"** என்று கூறுகிறான். அதேபோலத் தான் நீங்கள் உங்கள் ஆசீர்வாதங்களை எல்லாம் தொலைத்துவிட்டு கர்த்தாவே எனக்கு ஒன்றுமே இல்லை, நான் எல்லோராலும் கீழ்த்தரமாய் நினைக்கப் படுகிறேன், நான் துரத்திவிடப்பட்டவனை போல இருக்கிறேன் ஆண்டவரே என்று நீங்கள் கலங்கிய நிலையில் இருக்கலாம். ஆனால் தேவன் அதிலிருந்து உங்களை திரும்ப கொண்டு வருவார். தேவன் தான் எனக்கு இந்த தண்டனையை கொடுத்துள்ளார் என்று கூட நீங்கள் நினைக்கலாம். ஆனால், கர்த்தர் உங்களை உயர்ந்த ஸ்தானத்திற்கு திரும்ப வரப் பண்ணுவார். நீங்கள் நன்மையை அனுபவிக்க செய்வார்.

**அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள்மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன்- எரேமியா 12 : 15**

## எலும்பு முறிந்ததை காயம் கட்டுவார்!

அடுத்ததாக, அந்த வசனம் **"எலும்பு முறிந்ததை காயம் கட்டுவேன்"** எனக் கூறுகிறது. எலும்பு முறிந்தது என்றால், உடைக்கப்பட்ட, உடைந்துபோன ஒரு எலும்பாகும். எலும்பு முறிந்தவர்களை பார்ப்பீர்களானால் முதலாவது அவர்களால் வலி தாங்க முடியாது, உடைந்த பகுதியை அசைக்கவே முடியாது, அடுத்ததாக நீங்கள் என்ன தான் மேலோட்டமான சிகிச்சை கொடுத்தாலும் அது குணமாகாது. அதற்கென்று சில மருத்துவ முறைகள் உள்ளது, அறுவை சிகிச்சைகள் உள்ளது. அதன் வழியாகத்தான் அதை சரி செய்ய முடியும். அப்படி செய்யும் பொழுது அதற்கு வேறு ஏதாவது Support system தேவை. சில நேரம் Splint வைப்பார்கள். சில இடத்தில் திருகுகள் (Screws) நட்ஸ் வைப்பார்கள். சில இடத்தில் தடி (Rod) வைப்பார்கள். இப்படி கடினமான ஒரு Support system இல்லை என்றால் இந்த எலும்பினுடைய பெலனை நீங்கள் திரும்பவும் கொண்டு வரவே முடியாது.

ஒருமுறை எனது சிநேகிதி ஒரு பேருந்து

விபத்தில் சிக்கிக் கொண்டாள். அவளது முகத்தை தவிர எல்லா இடத்திலும் அடிபட்டுவிட்டது. அவள் இடுப்புக்குக் கீழ் பேருந்தின் இருக்கைக்கு அடியில் சிக்கி பயங்கரமான எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. இடுப்பு, கால் தொடை எலும்புகள் எல்லாம் நொறுங்கி விட்டது. அவளுக்கு வருடக் கணக்கில் சிகிச்சை கொடுத்தார்கள். அவள் நடப்பதே கேள்விக்குறி என்ற நிலை. அந்த எலும்புகள் அனைத்தும் சரி பண்ணப் படும் வரைக்கும் அவளுக்கு நிறைய procedure செய்தார்கள். அதுமாத்திரமல்ல, ஒருமுறை அவளை நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபொழுது அவளுடைய காலை தூக்கி கட்டி நொறுங்கின அந்த எலும்பு இணைவதற்காக எலும்பு முறிந்த இடங்களில் எல்லாம் screws, Nuts & steel Rod வைத்திருந்ததை பார்க்கவே பயங்கரமான காட்சியாக, கொடூரமான சிகிச்சை முறையாக இருந்தது.

இதேப்போலத்தான் நம்முடைய கர்த்தரும் **"என்னுடைய ஆடுகளில் நிறைய ஆடுகளுக்கு எலும்பு முறிக்கப்பட்டிருக்கிறது"** அதை நான் சரியாக்குவேன் எனக் கூறுகிறார். உங்களுடைய Support system ஆன பின்முதுகு எலும்பு என்று சொல்வார்களே அதுவே முறிந்திருக்கலாம். நீங்கள் எதை நம்பி இருந்தீர்களோ, அது முறிக்கப்பட்டிருக்கலாம். **"எனது தொழிலை நம்பி தான் குடும்பத்தை நடத்தினேன், தொழிலில் நஷ்டம், என் மனைவியை நம்பி தான் நான் வாழ்கிறேன் இப்பொழுதோ விவாகரத்து என்கிற நிலைமை யில் வந்து நிற்கலாம். என் பிள்ளைகளை நம்பித் தான் நான் இருக்கிறேன்"** என்று சொல்லி நீங்கள் நினைக்கலாம். உங்கள் பிள்ளைகள் உங்களை கைவிட்டு இருக்கலாம், உங்கள் பெற்றோர் உங்களை கைவிட்டிருக்க லாம். அப்படி எலும்பு முறிந்துபோய் உங்களுடைய புண்கள் சீழ் வடிந்ததாகக் கூட இருக்கலாம். உங்கள் இருதயம் முறிக்கப் பட்டிருக்கலாம், வேதனையால் நிரப்பப்பட்டு இருக்கலாம், கலங்காதீர்கள்! தாவீது கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தபொழுது அவனுடைய இருதயம் நொறுக்கப்பட்டது.

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**

**தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங் குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் - சங்கீதம் 51: 10, 17**

அன்பு சகோதர, சகோதரிகளே! நொறுங்கின உங்கள் இருதயத்தை தேவன் புறக்கணிக்கவே மாட்டார்.

**பிரியமான தேவ ஜனமே! வியாதியினாலே, பாவத்தினாலே, கடன் பாரத்தினாலே, சமாதானம் இல்லாமல், எந்தவிதத்திலும் சந்தோஷம் இல்லாமல் மற்றவர்களுடைய இழிச் சொற்களை தாங்க முடியாமல், அற்புதங்களை காணாமல் நீங்கள் பல வருடம் படுகிற பாடுகளினால் உங்களுடைய எலும்புகள் முறிந்தது போல வேதனையை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இன்றைக்கு கர்த்தர் உங்கள் எலும்பு முறிவுகளை கட்டுவார்.** தேவனால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை! உங்களுக்கு எப்படிப்பட்ட காயங்கள் இருந்தாலும், எலும்பு முறிவுகள் இருந்தாலும் அவர் நிச்சயமாக அதை சரி பண்ணி காயம் கட்டுவார். மாற்கு 9ம் அதிகாரத்திலே ஒரு தகப்பன் கதறுகிறான். சீஷர்களிடத்தில் பிசாசினால் பாதிக்கப்பட்ட தன் மகனை அழைத்துக் கொண்டு வருகிறான். தீயிலும், தண்ணீரிலும் அவனை தள்ளின பிசாசை சீஷர்களால் விரட்ட முடியவில்லை. அப்பொழுது பரிசேயர்கள் எல்லோரும் அவர்களை பார்த்து ஏளனம் செய்கிறார்கள். ஆனால் இயேசுவை பார்த்த வுடன் பிசாசு அலைக்கழிக்கிறது. அப்பொழுது இயேசு அந்த தகப்பனிடம் **"இது எத்தனை நாளாக இருக்கிறது"** என்று கேட்கிறார். அதற்கு தகப்பன் **"சிறுவயதுமுதற் கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்ய**

**வேண்டும்"** என்று கெஞ்சுகிறான். அந்த தகப்பனுக்கு ஒருவேளை இயேசுதான் மேசியா என்று தெரியாமல் இருந்திருக்கலாம். இயேசுவால் இவனை விடுதலையாக்க முடியும், சர்வ வல்ல சிருஷ்டி கர்த்தர் என்று தெரியாமல் இருக்கலாம், ஆனால் அவன் வடித்த கண்ணீரை பார்த்து இயேசு **"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்"** என்கிறார். அவர்களுடைய வாழ்க்கையில் அற்புதத்தை செய்தார். பல வருட எலும்பு முறிவு போன்ற வேதனையை சுமந்து வந்த தகப்பனை ஆறுதல்படுத்தினார், பிசாசின் பிடியில் சிக்கித் தவித்த மகன் விடுதலையாக்கப் பட்டான்.

நாயின் ஊர் விதவை தன் மகனை இழந்து கண்ணீரோடு போகிறாள். இயேசுகிறிஸ்து அவளை பார்த்து **"அழாதே"** என்று கூறி மகனை உயிரோடு எழுப்பினார்.

சாறிபாத் ஊர் விதவை **"பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப் படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன்" (1 இராஜா. 17: 12)** என்று கூறுகிறாள். ஆனால் சர்வ வல்ல தேவன் எலியாவை சாறிபாத் விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். அன்பு சகோதர, சகோதரிகளே! இன்றைக்கு உங்கள் எலும்பு முறிவுகளை கட்டுவதற்காகவே உங்களுக்கு தேவன் இந்த வாக்குத்தத்தை கொடுக்கிறார். 2021ஆம் ஆண்டில் தேவன் உங்களை ஆறுதல்படுத்துவார், ஆசீர்வதிப்பார்.

## நசல் கொண்டதை திடப்படுத்துவார்

இந்த வசனத்தின் கடைசி பகுதியில் **"நசல் கொண்டதை திடப்படுத்துவேன்"** எனக் கூறப் பட்டுள்ளது. நசல் கொண்டது என்றால் பெலவீனமானது, அதாவது சிலரை பார்த்த வுடனே சொல்வார்கள், இவன் என்ன, இவள் என்ன இவ்வளவு பெலவீனமாக இருக்கிறான் என்று கேட்பார்கள். நம்முடைய வாழ்க்கையில் நசல் கொண்டது, பெலவீனப்பட்டது நிறைய இருக்கலாம். உங்கள் உறவுகள் எப்படிப் பட்டதாக இருக்கிறது? சிலர் நன்றாக இருப்பார்கள், பெரிய வீட்டில் இருப்பார்கள், ஆனால் சமாதானமின்றி காணப்படு வார்கள். ஒரு சமயம் ஒரு தாய் "நாங்கள் பெரிய வீட்டில் இருக்கிறோம், ஆசீர்வாதமாக இருக்கிறோம். ஆனால் ஒரு வீட்டிற்குள் நானும் என் கணவரும் பேசிக் கொள்ள மாட்டோம். என்னுடைய கணவருக்கும், எனக்கும் எந்த பேச்சும் கிடையாது. ஏதாவது அவருக்கு வேண்டும் என்றால் பிள்ளைகளை அழைப்பார், இதை போய் வாங்கிக் கொண்டு வா என்பார் எனக் கூறினார்கள். அதை கேட்ட பொழுது எனக்கு வேதனையாக இருந்தது. அவ்வளவு பொருளாதார ஆசீர்வாதங்கள் இருந்தும், சமாதானம் இல்லையே. உறவுகள் நசல் கொண்டதாக இருக்கிறது. இன்னும் சில பேருடைய வீட்டிலே கோடி கோடியாக, லட்சம் லட்சமாக சம்பாதித்தாலும் கூட பணமே இருக்காது. அவர்கள் பொருளாதாரம் மிகவும் பெலவீனமாக இருக்கும். சிலருடைய படிப்பு, ஞானம் பெலவீனமாக இருக்கும். சிலருடைய வாழ்க்கையே பெலவீனமாக இருக்கும். இப்படி ஆசீர்வாதமற்ற நசல் கொண்டதாக இருக்கிற இந்த வாழ்க்கையை தேவனால் பெலப்படுத்த முடியும். **மாற்கு 2:17ல் "பிணியாளுக்கு வைத்தியன் வேண்டும்"** என இயேசு கூறுகிறார். அப்படிப்பட்டவர்களை இன்றைக்கு அவர் திடப்படுத்துவார். உங்கள் வாழ்க்கையிலே என்னென்ன எல்லாம் நசல் கொண்டதாக இருக்கிறது என்று உங்களுக்குத் தான் தெரியும். சரீர பெலவீனங்கள், சுகமில்லாமை, எதுவுமே எனக்கு புரியவில்லை, எனக்கு சமாதான மில்லை, எனக்கு பிரச்சனைகள் இருக்கின்றன. இப்படி எவ்வளவோ காரியங்கள் பெலப்படுத்த முடியாமல் உங்கள் வாழ்க்கையில் இருக்கலாம்.

ஆனால் அந்த காரியங்களை எல்லாம் பெலப்படுத்துவதற்காகவே இன்றைக்கு தேவன் உங்களுக்கு வாக்குத்தத்தங்களை கொடுத்து, உங்களை ஆசீர்வதிப்பேன் என்று கூறுகிறார்.

**யோசுவா 1:5-9ல்** வாசிக்கும்பொழுது அங்கே யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை நடத்துவதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டான். ஆனாலும்கூட அவனுக்குள்ளே ஒரு பயம் இருந்தது. மோசேயினிடத் திலேயே இவ்வளவு முரட்டாட்டமாய் இந்த ஜனங்கள் இருந்தார்களே, நான் இவர்களுக்கு எம்மாத்திரம், எந்த தகுதியுமே எனக்கு இல்லை என்று அவன் யோசித்திருக்கலாம். ஆனால் 9ம் வசனத்தில் **"நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"** என்றும், **உபாகமம் 3:28ம்** வசனத்தில் **"நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து, அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து; அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகக் கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான்"** என்றும் யோசுவாவை திடப்படுத்து என்றும் தேவன் சொல்கிறார். இன்றைய காலக் கட்டத்தில் நல்ல சத்தான உணவுகள் கொடுத்து பெலப்படுத்துகிறார்கள். அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும், பெலன் வரவேண்டும் என்று நாம் சொல்கிறோம் அல்லவா? ஆனால் கர்த்தரோ தெய்வீக விதமாக, அற்புதமாக உங்களுடைய வாழ்க்கையிலே நசல் கொண்ட எல்லாவற்றையும் திடப்படுத்துவார். யோசுவாவை அப்படித்தான் திடப்படுத்தி அற்புதங்களை செய்தார். சூரியனும், சந்திரனும் யோசுவா கட்டளையிட்ட மாத்திரத்தில் நின்றது. தேவன் மனுஷனுடைய வார்த்தையை கேட்ட அந்த நாளுக்கு ஒத்த நாள் வேறு இல்லை என்று வேதம் சொல்கிறது. அப்படிப்பட்ட அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்தவர் உங்கள் வாழ்க்கையில் அற்புதத்தை நிச்சயம்செய்வார்.

நெகேமியா அலங்கத்தை கட்டுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்கிறான். அப்படி எடுக்கும் பொழுது சத்துருக்கள் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனை சோர்வடையப் பண்ணுகிறார்கள். அவனுடைய எல்லா உழைப்பையும் கலங்கடிக்கிறார்கள். ஆனால் நெகேமியா திடப்படுத்தப்படு கிறான் **(நெகேமியா 6:9)** எப்படி? தன்னுடைய தேவனாகிய கர்த்தரால் தன்னை திடப்படுத்தி கொண்டான். கர்த்தர் தம்முடைய சீஷர்களை, தீர்க்கதரிசிகளை, தம் பிள்ளைகளை திடப்படுத்தினதை வேதத்தில் நாம் பார்க்கலாம். **1 சாமுவேல் 30:6ல்** தாவீது மிகவும் நொறுக்கப்படுகிறான். அவன் கூட இருந்த மனுஷர்கள், அவர்களுடைய பிள்ளைகள், மனைவிகள் எல்லாம் தொலைந்துவிட்டார்கள் என்று சொல்லி, சத்துருக்கள் வந்து பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லி தாவீதை கல்லெறிய நினைத்தார்கள். தாவீதோ தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

ஆம் அன்பானவர்களே! இன்று உங்களுடைய திடன், உங்களுடைய பெலன் யாரிடம் இருக்கிறது? அவன் எனக்கு பணம் தருவான், இவன் இதை எனக்கு செய்வான், இவன் எனக்கு சமாதானத்தை உண்டு பண்ணுவான் என்று ஒருபோதும் மற்றவர்களை சார்ந்து இருக்காதீர்கள். உங்கள் குடும்பத்தில் தொன்றுதொட்டு வருகின்ற பிரச்சனைகள், சாபங்கள், நசல் கொண்டதாக இருக்கிற எல்லாவற்றையும் திடப்படுத்த கர்த்தரால் முடியும். **"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்து வாராக" (1 பேதுரு 5:10)** இந்த திடப்படுத்தல் நமக்கு எப்படி வருகிறது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே இருக்கும் பொழுது இவை நடக்கின்றது. தேவ ஜனமே! நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாட்கள் செல்ல செல்ல தேவனுடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த வருகையில் நாம் எடுத்து கொள்ளப்

படுவதற்கு முன்பாக நாம் மற்றவர்களை பலப்படுத்தவும், ஆசீர்வதிக்கவும் முயற்சி செய்ய வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே இருக்கும்பொழுது தான் இந்த நசல் கொண்டதை எல்லாம் பெலப்படுத்த, திடப்படுத்த முடியும். **அப்போஸ்தலர் 1:8; லூக்கா 1:35; ஏசாயா 11:2; 35: 3ல்** நீங்கள் இதைக் குறித்து வாசிக்கலாம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வரும்பொழுது எல்லா வற்றையும் செய்ய அவர் நம்மை பலப்படுத்துகிறவராக இருக்கிறார். பலத்தை கொடுக்கிற ஆவியானவர், தளர்ந்தவைகளை திடப்படுத்துகிற ஆவியானவர், உன்னதமான வருடைய பெலன் நம்மை பரிபூரணமாய் ஆட்கொள்ளும். புகழ்பெற்ற சுவிசேஷகர் ரெயின்காட் போங்கே "The power of God is the Holy Spirit dwelling in us" என்று கூறுகிறார்.

ஆம் பிரியமானவர்களே! உங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியானவர் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் கடன் பாரத்திற்கு பயப்பட வேண்டும்? நீங்கள் ஏன் வியாதிக்கு பயப்பட வேண்டும்? நீங்கள் ஏன் உலகப் பிரகாரமாக வருகிற கஷ்டங்களுக்கு பயப்பட வேண்டும்? நீங்கள் ஏன் ஊழியத்தில் வருகிற சோதனைகளுக்கு பயப்பட வேண்டும்? கனியற்ற ஒரு வாழ்க்கை வாழ்கிறேனே என்று சொல்லி ஏன் நீங்கள் பயப்பட வேண்டும்? **தேவன் உங்களுக்குள்ளே காணப்படுகின்றதான எல்லா பெலவீனமானதையும், எல்லா சோர்ந்து போனவைகளையும் உயிர்ப்பிக்க வல்லவராய் இருக்கிறார்.** பரிசுத்த ஆவியானவர் உங்களை திடப்படுத்தும்பொழுது நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பீர்கள். அவர் நம்மை திடப்படுத்தி, காயங்கட்டி, எலும்பு முறிந்ததை கட்டி, நமக்கு தேவையானவற்றை செய்து, துரத்துண்டதை திரும்ப கொண்டு வந்து, காணாமல் போனதை தேடுகிறது மாத்திரமல்ல, அவர் நியாயத்தையும் நிலைநிறுத்துவார். ஒருவேளை நீங்கள் அநேக மனுஷர்களால் கஷ்டப்பட்டு பிரச்சனையில் சிக்கி இருக்கலாம், உங்களை அவர்கள் ஏமாற்றி இருக்கலாம். ஆனாலும் கலங்காதீர்கள்! தேவனாகிய கர்த்தர் இன்றைக்கு **"கொழுத்த ஆடுகளுக்கும், இளைத்த ஆடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை காண்பிக்கிறவர்; உங்களுக்குள்ளே வாசம் பண்ணுகிறார்"** உங்களுக்காக அவர் அற்புதங்களை செய்கிறவராய் இருக்கிறார். எனவே பரிசுத்த ஆவியான வரின் வல்லமையை பெற்றுக் கொள்ளுங்கள். இந்த வருடத்தில் தேவனை நோக்கி **"கர்த்தாவே! நான் நசல் கொண்டவனாக, எலும்பு முறிந்தவனை போல, நான் காணாமல் போய், துரத்தப்பட்ட இடத்திலேயே இருக்க மாட்டேன், நான் உமக்குள்ளே திடப்படபோகிறேன், நான் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கப் போகிறேன். நீர் எனக்காக நியாயம் செய்யும் என்று கர்த்தருக்குள் உங்களை திடப் படுத்துங்கள்".** நிச்சயமாக தேவனாகிய கர்த்தர் உங்களிடம் வந்து, உங்கள் எல்லா கண்ணீரையும் துடைத்து, இந்த வருடத்தை உங்களுக்கு ஆசீர்வாதமாய் மாற்றித் தருவார்.



# ஜீவனுள்ள தேவனிடமிருந்து அற்புதங்களை பெற்ற பங்காளர்களின் சாட்சிகள்

## காணாமல் போன இருசக்கர வாகனம் கிடைத்தது!

எனது இருசக்கர வாகனம் காணாமல் போய் விட்டது. இதனால் மிகுந்த கவலையடைந்தோம். வாகனம் கிடைக்க வேண்டுமென அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு வாகனம் கிடைக்கும்படி அற்புதம் செய்தார். நன்றி காணிக்கையாக ஊழியத்திற்கு **Rs.1,000/-** காணிக்கை தருகின்றோம்.

**- Sis. மைதிலி, காங்கேயம்**

## நல்ல வேலை கிடைத்தது!

எனது மருமகன் ஒரு கம்பெனியில் 15 வருடங்களுக்கு மேலாக வேலை பார்த்து வந்தார்கள். திடீரென வேலையிலிருந்து நீக்கிவிட்டபடியால் ஒரு வருடத்திற்கு மேலாக வேலையில்லாமல் வீட்டில் கவலையோடு இருந்தார்கள். எனவே மருமகனின் நிலையை அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினேன். பதில் கடிதத்தில் **"உங்கள் மருமகனுக்கு புதிய வேலையை தேவன் தருவார்"** என எழுதியிருந்தார்கள். அதேபோல கர்த்தர் எனது மருமகனுக்கு நல்ல வேலை கிடைக்கும்படி அற்புதம் செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- திரு.ஜான் ஆபிரகாம் சுந்தர், கன்னியாகுமரி**

## மரணப் பள்ளத்தாக்கிலிருந்து மீட்டெடுத்த தேவன்!

எனக்கு திருமணமாகி பத்து வருடமாகிறது. எனது கணவருக்கு மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு, இடது பக்கம் முழுவதும் செயலிழந்து பக்கவாதம் உண்டானது. உயிர் பிழைப்பது கடினம் என்ற நிலை, மரணத் தருவாய்க்கு தள்ளப்பட்டார். அந்த நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜெபிக்கக் கேட்டோம். அப்பொழுது சகோதரர் **"உன்னுடைய கணவர் உயிரோடு வருவார், கர்த்தர் ஜீவனை கொடுப்பார்"** என்று கூறினார். நானும் சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்தேன். எனது கணவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது, இப்பொழுது நன்றாக நடக்கின்றார், தனது வேலைகளை தானே செய்வதோடு, வேலைக்கும் செல்ல கர்த்தர் கிருபை செய்துள்ளார். அற்புத சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! எனது பொருத்தனை காணிக்கை ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன்.

**- திருமதி. தபீத்தாள் மைதிலி, குடியாத்தம்**

## நல்ல விலைக்கு தோப்பு விற்பனையானது!

பல வருடங்களாக எங்களுக்கு சொந்தமான தென்னந்தோப்பை விற்க முடியாமல் மிகுந்த தடையாக இருந்தது. இந்த தோப்பு நல்ல விலைக்கு விற்க வேண்டுமென பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் பொருத்தனையை அங்கீகரித்து நல்ல விலைக்கு 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் விற்க இரக்கம் செய்தார். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்! எனது பொருத்தனை காணிக்கை ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன்.

**- திரு. தேவதாஸ், பாளையங்கோட்டை**

## பெலவீனம் நீங்கியது!

எனக்கு அதிகமான காய்ச்சல் மற்றும் யூரினரி இன்பெக்ஷன் இருந்தது. இதனால் அதிக பெலவீனப் பட்டேன். இந்நிலையில் கர்த்தரிடம் பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு மருத்துவமனை செல்லாமலேயே அற்புதமான சுகத்தை எனக்குத் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் பொருத்தனை காணிக்கைளை அன்பரின் ஊழியத்திற்கு தருகின்றேன்.

**- Sis. மரியம்மாள், திருநெல்வேலி**

## படிப்பில் வெற்றி, சொத்து விற்க இருந்த தடை நீங்கியது!

எனது மகள் ஷைலி 12ஆம் படிப்பில் மிகவும் பின்தங்கி இருந்தாள். 2020ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டுமென **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கக் கேட்டேன். ஜெபத்தின் பலனாக மகள் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைய கிருபை செய்தார். மேலும், எனது சொத்தை விற்கவிடாமல் சிலர் இடையூறு செய்தனர். இதற்காகவும் சகோதரரிடம் ஜெபித்துக் கொண்டேன். சகோதரர் தீர்க்கதரிசனமாக கூறியபடி சொத்து எந்த இடையூறுமின்றி விற்பனையானது. அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! எனது பொருத்தனை காணிக்கை ஊழியப் பணிக்கு தருகின்றேன்.

**- திரு. பிரான்சிஸ், சேலம்**

## இரட்சிப்பை அருளின தேவன்!

எனது கணவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெப விண்ணப்பம் எழுதி கொடுத்தேன், மேலும், தனி ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபித்துக்கொண்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். எனது கணவர் இரட்சிக்கப்படும்படி அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அதுமாத்திர மல்ல, எனது பிள்ளைகள் பிர்லின், ஷிபோலெத் திருமண காரியங்கள் நல்லபடியாக, ஆசீர்வாதமாக நடைபெற்றது. எனக்கிருந்த இருதய வியாதி யிலிருந்தும் தேவாதி தேவன் அற்புத சுகத்தை கொடுத்தார். பொருத்தனை காணிக்கையாக ஊழியத்திற்கு தருகின்றோம்.

**- திருமதி. ராஜரெத்தினம், கன்னியாகுமரி**

## அன்பரின் ஊழியத்தின் மூலம் ஏறெடுக்கப்படும் ஜெபத்தினால் தொடர்ந்து ஆசீர்வதிக்கப்பட்ட ஆசிரியர் கூறும் சாட்சி

நான் ஆசிரியராக அரியலூர் மாவட்டத்தில் பணியாற்றுகின்றேன். நவம்பர் மாதம் எனக்கு வயிற்றுப் பகுதியில் வலி ஏற்பட்டது. மருந்து



மாத்திரை எடுத்தும் குணமாக வில்லை. வலியினால் மிகவும் துடித்தேன். அவ்வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டேன். அவர்கள் எனக்காக ஜெபித்து சில வேத வசனங்களை சொல்லி என்னையும் ஜெபிக்கும்படி கூறினார்கள். அதேபோல வசனத்தை சொல்லி சொல்லி ஜெபித்தேன். விண்ணப்பத்தை கேட்ட சர்வவல்ல தேவன்அற்புத சுகத்தை எனக்கு அருளினார். மேலும், சிறுநீரகத்தில் கல் ஏற்பட்டு அதனாலும் மிகுந்த துன்பத்தை அனுபவித்தேன். ஸ்கேன் செய்த பொழுது அதில் அதிக கற்கள் இருப்ப தாக மருத்துவர்கள் கூறினார்கள். இதற்காகவும் சகோதரரிடம் ஜெபித்துக் கொண்டு ஒருசில நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை ஸ்கேன் செய்து பார்த்தபொழுது மருத்துவர்களே ஆச்சரியப்படும் வண்ணமாக சிறுநீரகத்தில் கற்கள் கரைந்துள்ளதாக கூறினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அதுமாத்திரமல்ல, கடந்த வருடம் வீடு கட்டுவதற்கு இடம் வாங்கினேன். அந்த இடத்தை என் பெயருக்கு மாற்றுவதற்கு பல பிரச்சனைகள் வந்தது. ஜெபத்தினால் அந்த பிரச்சனை அனைத்தும் மாறும்படி தேவன் கிருபை செய்தார். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அன்பரின் ஊழியத்தில் ஜெப உதவியை நாடுவேன். இங்கு ஏறெடுக்கப்படும் ஜெபங்களை கர்த்தர் கேட்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. விஜயலட்சுமி, அரியலூர்**

## மலை போன்ற கடன் பிரச்சனை தீர்க்கதரிசன வார்த்தையின்படி தீர்ந்தது!



நான் சென்னையில் வசிக்கின் றேன். சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக எனது வருமானம் பாதிக்கப் பட்டு சுமார் ஏழு லட்சம் கடனாகிவிட்டது. இதனால் குடும்பத்தில் மனநிம்மதியிழந்து செய்வதறியாமல் திகைத்து, கலங்கியிருந்தேன்.

இந்நிலையில் திருச்சி குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் ஏவப்பட்டு **"என்னை பெயர் சொல்லி அழைத்து, கடன் பிரச்சனையோடு வந்திருக்கிறீர்கள்!, உங்கள் கடனை அடைப்பதற்கு இரண்டு நபரை தேவன் எழுப்புவார்"** என்று கூறினார்கள். நமக்கு எப்படி இவ்வளவு பெரிய தொகை கிடைக்குமென்று அரைமனதுடன் வீடு திரும்பினேன். ஆனால், நான் சற்றும் எதிர்பாராத வண்ணம் கர்த்தர் என் மத்தியில் அற்புதம் செய்தார். சகோதரர் அவர்கள் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே எனக்கு தெரிந்த இரு நபர்கள் மூலம் கர்த்தர் ஏழு லட்சம் ரூபாய் கடன் பணத்தை சந்தித்தார். எனது கடன் முழுவதும் தீர்ந்தது. இந்த அதிசயத்தை, அற்புதத்தை என்னால் நம்பவே முடியவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

மேலும், நான் அன்பரின் ஊழியத்தில் நடைபெற்ற வல்லமை முகாமில் கலந்துகொண்டதால் கர்த்தர் என் மூலமாக அநேக அற்புத அடையாளங்கள் செய்து ஊழியத்திலும் வல்லமையாக பயன்படுத்தி வருகின்றார். தேவனுக்கே மகிமை!

**- திரு. பீட்டர், சென்னை**

## பணத்தேவைகள் சந்திக்கப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட கிருபை செய்த தேவன்!



நாங்கள் குடியிருக்கும் பகுதியில் நீர் ஆதாரம் குறைவு, ஆழ்துளை மோட்டார் போட்டாலும் தண்ணீரே வராது. இந்நிலையில் எங்கள் வீட்டில் ஆழ்துளை போடும் பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைப் பேசியில் தொடர்புகொண்டு ஜெபித்தோம். அவர்கள் ஜெபித்து **"விசுவாசத்தோடு ஆழ்துளை போடுங்கள், கர்த்தர் தண்ணீரை தருவார்"** என்றார்கள். அப்படியே செய்தோம், நாங்கள் ஆச்சரியப்படும் வண்ணமாக 60 அடியிலேயே தண்ணீர் வந்தது. மேலும், நாங்கள் வீடு கட்ட ஆரம்பிக்கும் பொழுது என்னிடம் 10 லட்சம் ரூபாய் மாத்திரமே இருந்தது. விசுவாசத்தோடு, நம்பிக்கையோடு வீட்டை கட்ட துவங்கினோம். 60 லட்சம் செலவில் வீடு கட்டி முடிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார். பணத்தை அற்புதமாக தேவன் சந்தித்தார். நாங்கள் வீடு கட்ட கூடாது என அநேகர் எங்களுக்கு விரோதமாக மந்திரங்கள், செய்வினைகள் செய்தார்கள். ஆனால் சகோதரர் அவர்களின் ஜெபத்தினால் அந்த கட்டுகளை கர்த்தர் முறித்து போட்டார். நான் இருக்கும் வீட்டை தவிர ஏனைய இரண்டு வீடுகள் கட்டப்பட்டு நாங்கள் வாடகை வாங்கும் அளவிற்கு கர்த்தர் அற்புதம் செய்துள்ளார்.

செய்வினை காரணமாக எனது பெற்றோர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு, சுயநினைவை இழந்து மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அந்த நேரத்திலும் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெபத்தினால் அவர்கள் சுகம் பெற்றனர். இப்பொழுது எனது பெற்றோர் பூரண சுகத்துடன் இருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, எனது இரண்டு பிள்ளைகள் எங்கு சென்றாலும் செய்வினையின் நிமித்தம் அவர்களுக்கு விபத்து ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அந்த பிரச்சனையும் ஜெபத்தினால் தீரும்படி சர்வ வல்லவர் அநுக்கிரகம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## பெயர் சொல்லி அழைத்து ஆசீர்வதிக்கப்பட்ட சகோதரியின் சாட்சி



சில மாதங்களுக்கு முன்பு திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தீர்க்கதரிசனமாக **"இங்கு ஒரு சகோதரி தனது தம்பி கடன் சுமையினால் இருப்பதை நினைத்து அழுது கொண்டிருக்கிறீர்கள், கர்த்தர் உங்கள் கண்ணீருக்கு பதில் தரப்போகிறார், கடன் பிரச்சனையை தீர்ப்பார்"** என்று இரண்டு முறை கூறினார்கள். அவர்கள் கூறியது போலவே **"கர்த்தர் எனது தம்பிக்கு இருந்த கடனை அற்புதமாக தீர்க்க வழிவாசலை திறந்தார். புதிய கார் வாங்கவும் கிருபை செய்தார்".** அதுமாத்திரமல்ல, எனது சகோதரிக்கு சுமார் 8 வருடம் திருமணம் தடையாக இருந்தது. தஞ்சாவூரில் நடைபெற்ற கூட்டத்தில் சகோதரரை சந்தித்து ஜெபித்துக் கொண்டோம். சகோதரர் ஜெபித்து

**"நிச்சயமாக நல்ல ஒரு மணமகனை உங்கள் சகோதரிக்கு கர்த்தர் தருவார், சகோதரி ஒரு பேராசிரியராக உயர்வார்"** என்றார்கள். அதேபோல நல்ல ஒரு பேராசிரியர் பணிபுரியும் மணமகனே சகோதரிக்கு கிடைத்தார். தங்கையும் பேராசிரியராக பணியில் சேர்ந்தாள். திருமணம் மிகுந்த ஆசீர்வாத மாக நடைபெற்றது. அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் அன்பரின் ஊழியப் பணிகளுக்கு எனது பொருத்தனை காணிக்கையை செலுத்துகிறேன்.

**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை**

## பல ஆண்டு வழக்கு எங்கள் பக்கம் முடிய கிருபை செய்த தேவன்



சில தினங்களுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத ஜெபத்திற்கு வந்தேன். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனது விவசாய தொழில் ஆசீர்வதிக்கப்படவும், எனது நிலம் சம்பந்தப்பட்ட வழக்கு நடந்து வருகிறது அந்த பிரச்சனையும் எனக்கு சாதகமாக முடிய வேண்டுமென ஜெபித்து சென்றேன். **"விவசாய வேலைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார் கலங்காமல் போ, வழக்கு பிரச்சனையும் விரைவில் முடியும்"** என்று கூறினார். நானும் நம்பிக்கையோடு வீட்டிற்கு வந்தேன். எனது வழக்கு சம்பந்தமாக நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எனது வீட்டிலிருந்து காலை வேளையில் புறப்பட்டேன். அப்பொழுது தாலுக்கா அலுவலகத்திலிருந்து எனக்கு தொலைப் பேசி வந்தது. அதில் பேசிய அதிகாரி **"உங்கள் வழக்கு முடிவாகிவிட்டது, உங்களுக்கு ஆர்டர் (Order Form) போட்டுவிட்டேன். 2021ஜனவரி 12ம் தேதி வந்து உங்களது ஒரிஜினல் ரிக்கார்டை காண்பித்தீர் களானால் கம்ப்யூட்டரில் ஏற்றி விடுவோம்"** என்று கூறினார். பல வருடமாக இந்த பிரச்சனைக்கு அலைந்து கொண்டிருந்தேன். நான் சற்றும் எதிர்பாராத வண்ணம் இந்த வழக்கு பிரச்சனை முடிவுக்கு வந்தது. அதற்காக தேவனை துதிக்கின்றேன். எனது பொருத்தனை காணிக்கையை ஊழியப் பணிகளுக்கு தருகின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. மரியபிரான்சீஸ், திருக்கானூர்பட்டி, தஞ்சாவூர்**

## அற்புத சுகம் தந்த சர்வ வல்லவர்



எனது தந்தைக்கு திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டு மிகுந்த ஆபத்தான நிலையில் மருத்துவ மனைக்கு அழைத்து சென் றோம். மருத்துவர்கள் மிகவும் தாமதமாக நோயாளியை அழைத்து வந்துள்ளீர்கள். இப்போதைக்கு அவரது உயிருக்கு உத்திரவாதம் கூற முடியாது என்று சொல்லிவிட்டனர். இதனால் எங்கள் குடும்பத்தினர் அனைவரும் மிகுந்த கவலையடைந் தோம். இந்நிலையில் உடனடியாக **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்களை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு ஜெபிக்கக் கேட்டோம். கர்த்தர் அவர்களது ஜெபத்தை கேட்டார். தேவ கிருபையால் எனது தந்தை உயிர் பிழைத்து இப்பொழுது நன்றாக உள்ளார். தேவனுக்கே மகிமை!

**- திருமதி. குளோரி, திருச்சி**

## கன்னியாகுமரி
## அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதியாக கீழ்க்கண்டவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவரிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம்.
மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. ஜெரால்டு - 82203 17472**

முன் அட்டை உள்பக்கத்தொடர்ச்சி

**புற்றுநோய் வரவே கூடாது என்று சொல்லி உருக்கத்தோடு ஜெபித்து அந்த நோயை கடிந்து கொண்டார். இயேசுவின் திரு இரத்தம் குழந்தையின் இரத்தத்தோடு கலக்கும்படி கண்ணீரோடு ஜெபித்தார். தமது ஊழியக்காரரின் உருக்கமான ஜெபத்தை தேவன் கேட்டார்."** நாங்கள் மீண்டுமாக ஒருசில நாட்கள் கழித்து மருத்துவ பரிசோதனை செய்தோம். அப்பொழுது மிகப் பெரிய ஆச்சரியம் எங்களுக்கு காத்திருந்தது. மகளை விட்டு அந்த இரத்த புற்று நோய் இயேசுவின் வல்லமையால் பூரணமாக குணமடைந்திருந்தது. எந்த மருந்தும், சிகிச்சையும் இல்லாமல் மகள் பூரண குணமடைந்து இப்பொழுது பள்ளிக்கு செல்கிறாள். கர்த்தர் செய்த இந்த மாபெரும் அற்புதத்தை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். எங்கள் வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கும், ஊழியத்திற்கும் நன்றியாக இருப்போம். எங்கள் பொருத்தனையை தேவனுடைய ஊழியத்திற்கு படைக்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. தேவானந்தம், ஐதராபாத்**

**தீர்க்கதரிசனமாக கூறினார். அவர்கள் தீர்க்கதரிசனமாய் கூறும் பொழுது எனது மனைவி பெயரான சுதாராணி, எனது பெயர் சகரியா மற்றும் குழந்தைகள் பரிமளா, ஜெஸிக்கா, ஜான்சன் பெயர்களை சொன்னது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. பல வருடம் எங்களை தாக்கிக் கொண்டிருந்த கொடிய செய்வினை, ஏவல் ஆவிகளை இயேசுவின் நாமத்தில் விரட்டப்பட்டது. கர்த்தர் எங்களது எல்லா கட்டுகளிலிருந்தும் பரிபூரண விடுதலை தந்துவிட்டார்.** எங்கள் குடும்பம் இப்பொழுது மிகுந்த சமாதானமாக இருக்கிறது. எங்கள் பொருத்தனை காணிக்கையை ஊழியத்திற்கு தருகிறோம். தேவனுக்கு மகிமை!

**- திரு. சுதாராணி சகரியா, ஐதராபாத்**

## உடனடி தேவை

இந்த நாட்களில் அநேகர் வேலையிழந்து தவிப்பதை பார்க்கிறோம். அநேகருடைய வாழ்க்கை எதிர்பாராத சூழ்நிலையால் அவர்களை மிகுந்த சோர்விற்கு கொண்டு போயுள்ளது. இந்நிலையில் நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது வேலையில்லாமல் இருப்பார்கள் என்றால் அல்லது கர்த்தருக்கு பணி செய்ய முழு மனதோடு விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

1. Tally Erp 9 தெரிந்த Accountants
2. கம்ப்யூட்டரில் தமிழ் மற்றும் ஆங்கிலம் விரைவாக டைப்பிங் பண்ணத் தெரிந்த Data Entry Operators
3. அனுபவம் உள்ள கேமரா மேன்கள்
4. Adobe premiere pro தெரிந்த வீடியோ எடிட்டர்ஸ்
5. அனுபவம் உள்ள ஓட்டுநர்கள்
6. இரட்சிக்கப்பட்ட ஜெப வாஞ்சையுள்ள ஜெப வீரர்கள்
7. House keepers

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

**Ministry of Jesus, 10th Cross West Extn., Thillai Nagar, Trichy 620 018**
**Mob : 94888 45628 E.Mail: info@mojindia.org**

# அறுவடைப் பங்காளர் திட்டம்

Dr. ஆனந்த ஸ்திரா

**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்**

**- லூக்கா 10 : 2**

**மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலை யுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி ...அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளியாரோ? - நீதி. 24:11,12**

சில ஆண்டுகளுக்கு முன்பு நானும், எனது மனைவியும் ஊழியங்களுக்காக மலேசியா சென்றிருந்தோம். எங்களை அழைத்த அந்த தேசத்து மிகப்பெரிய பொறியாளர் (Engineer) எங்களை அன்போடு வரவேற்று நல்ல ஹோட்டலில் ரூம் ஏற்பாடு செய்து எங்களுக்கு தேவையானதை எல்லாம் செய்து கொடுத்தார். பிற்பாடு ஒரு சிறிய தேவாலயத்திற்கு சென்றோம். அங்கிருந்த தலைமை போதகர் ஆசிய நாட்டு தேவ ஊழியர்களுக்கு அமெரிக்காவிலுள்ள ஊழியர்களை போல மகத்தான அற்புதங்கள் செய்கின்ற அபிஷேகம் கிடையாது. ஆகவே, என்னை அறிமுகம் செய்தவரிடத்தில் நான் மெயின் சர்ச் சர்வீசில் (சுமார் 800 பேர் உட்காரும் ஹால்) பேசக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். அதற்கு பதிலாக மாலை நடைபெறும் ஆராதனையில் சுமார் 200 பேருக்கு மாத்திரம் ஜெபித்து செய்தி கொடுக்க சொன்னார். நான் பல மணி நேரம் ஜெபத்திற்கு பிற்பாடு கர்த்தாவே எனக்கு ஆத்துமாக்கள் வேண்டும் என்று ஜெபித்து சென்ற பொழுது அந்த 200 பேர்கள் மத்தியில் கர்த்தர் வீல் சேரில் வந்த ஏழு நபர்களை எழும்பி நடக்கவும், இன்னும் பல அற்புதங்களையும் செய்தார். கர்த்தருக்கே மகிமை! இதனை பார்த்தவர்களில் மிக முக்கியமான சிலர் அந்நாட்டில் உள்ள தங்களது மிகப்பெரிய தேவலாயத்தின் சுகமளிக்கும் ஆராதனையில் செய்தி கொடுக்க வேண்டும் என்று அழைத்தனர். அங்கு ஏழாயிரம் இந்தியர் அல்லாதவர்கள் வந்திருந்தார்கள். அந்த நாட்டு விசுவாசிகள் மட்டும் இக்கூட்டங்களில் அனுமதிக்கப்படுவார்கள். கர்த்தர் தம்முடைய அபிஷேகத்தின் ஆவியின் மூலம் பிதாவாகிய தேவனுக்கு மகிமை உண்டாக வந்திருந்த நோயாளிகள் 70 பேரை குணமாக்கினார். வீல்சேரில் கொண்டு வரப்பட்டவர்கள் எழுந்து நடந்தனர். இரண்டு மருத்துவர்களுடைய 15 வருட பார்வையற்ற திறன் மாறி பார்வை பெற்றனர். கர்த்தருடைய தீர்க்கதரிசனம் அநேகருக்கு வெளிப்பட்டது. இந்த நிலையில் கர்த்தர் செய்த அற்புதங்களை பெற்றவர்களால் இந்த செய்தி காட்டு தீ போல அந்த நாடு முழுவதும் பரவியது. இதை கேள்விப்பட்ட மிகப் பெரிய தொழிலதிபர் என்னை இரவு விருந்திற்கு அழைத்தார். (அவர் கிறிஸ்தவர் அல்ல) எனது நண்பரின் ஆலோசனைப்படி நானும் தயங்காமல் அந்த விருந்திற்கு சென்றிருந்தேன். நாலாவித உணவு வகைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதின் மத்தியில் ஒவ்வொரு டேபிளிலும் விஸ்கி, பிராந்தி போன்ற மிக விலை உயர்ந்த மதுபான பாட்டில்களும் வைக்கப்பட்டிருந்தது. சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் அங்கு கூடியிருந்தனர். நான் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டபடியால் என்னை இந்த விருந்தை ஆசீர்வதித்து துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். அப்பொழுது நான் அங்கிருந்த டேபிளை பார்த்தேன். என்னுடைய டேபிள் உள்பட எல்லாருடைய டேபிளிலும் சுமார் இரண்டாயிரம் டாலர் மதிப்புள்ள பலப் பல மதுபான பாட்டில்கள் வைக்கப்பட்டிருந்தன. நான் உடனே என்னை அழைத்த தொழிலதிபரை பார்த்து **"நான் சிறு வயதிலிருந்து மதுபானம்**

**குடிப்பதில்லை"** என்று பொருத்தனை செய்துள்ளேன். அதுமாத்திரமல்ல, கர்த்தர் தம்முடைய இரத்தத்தால் நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து ஆவிக்குரிய வரங்களை கொடுத்து எங்களை பயன்படுத்து கிறார். இந்த சமயத்தில் நீங்கள் அழைத்ததற்காக நன்றி. ஆனால், இந்த மதுபானம் இருக்கும் இடத்தில் இந்த உணவை ஆசீர்வதித்து ஜெபிக்க முடியாது என்று கூறிவிட்டேன். சில போதகர்களும் அங்கிருந்தார்கள். அவர்கள் என்னை பார்த்து **"ஐயா நீங்களும் கொஞ்சம் ருசி பார்த்து குடியுங்கள்"** என்றனர். நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன். நான் ஜெபிக்க முடியாது என்று மீண்டும் சொல்லி விட்டேன். சரி என்று எல்லோரும் அவரவர் டேபிளில் இருந்த அந்த பாட்டில்களை அந்த ஹோட்டல் சூப்பர்வைசரிடம் கொடுத்து விட்டார்கள். எல்லாருடைய நிலைமை யையும் கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினாலும், நான் ஒருவரையும் குற்றஞ்சாட்டி ஜெபிக்கவில்லை மாறாக அன்போடுகூட இந்த விருந்தை ஆசீர்வதிக்கும் படி ஜெபித்து அவர்களை சாப்பிட சொன்னேன். சாப்பாட்டில் கை வைத்தபொழுது நான் அபிஷேகத்தின் ஆவியால் நிரப்பப்பட்டு அந்த 20 பேரையும் பார்த்து அடுத்த முறை நான் வரும்பொழுது நீங்கள் நிச்சயம் இந்த தீய பழக்கத்தை விட்டு மாறிவிடுவீர்கள், இனிமேல் நீங்கள் எங்கே போனாலும் இந்த பழக்கம் உங்களை பின்தொடராது, இயேசு உங்களை மிகவும் நேசிக்கிறார் என்று கூறினேன். அதோடு கூட நான் அவர்களை பார்த்து அறியாமை யிலிருந்து ஜீவ ஒளியிடம் வாருங்கள் என்று நான் பேசிய அந்த தேவாலயத்தை அறிமுகம் செய்தேன். அங்கிருந்த பாதி பேர் மிகப்பெரிய தொழிலதிபராக இருந்தபடியால் என்னை பார்த்து சிரித்தார்கள். சகோதரரே, நாங்கள் உங்களுக்காக விலை உயர்ந்த விஸ்கி, பிராந்தி பாட்டில்களை எல்லாம் திருப்பி அனுப்பி விட்டோம். ஆனால் எங்கள் வீட்டிற்கு போனால் கண்டிப்பாய் நாங்கள் குடித்து விடுவோம். ஒருவர் என் வீட்டில் 50 பாட்டில் இருக்கிறது என்றார். இன்னொருவர் என் வீட்டில் 120 பாட்டில்கள் இருக்கிறது. இதை எல்லாம் வெளியே கொட்டி விடுவீர்களா, இது எல்லாம் இந்த நாட்டில் சகஜமான ஒன்று, எவ்வளவு வேண்டும் என்றாலும் மதுபானம் அருந்திவிட்டு கலாட்டா மாத்திரம் பண்ணக் கூடாது என்கிற சட்டம் இந்நாட்டில் உள்ளது, எனவே மதுபானத்தை விட முடியாது என்று கூறிவிட்டார். எனக்கு துக்கமாக இருந்தது. சாப்பிட்டுக் கொண்டே நவமான பாஷையில் ஜெபித்தேன். விசுவாசத் தோடு ஜெபத்தை முடித்தேன். கர்த்தாவே இந்த 20 பேருக்கும் உம்மேலுள்ள விசுவாசத்தில் மனந்திரும்பும்படி செய்யும் என்று தேவனிடம் மன்றாடினேன். சாப்பிட்டு முடித்து நான் அவர்கள் எல்லாரையும் பார்த்து **"இந்த நிமிடம் முதல் இயேசுவின் காயங்கள், அவர் திருஇரத்தம் உங்கள் பாவங்களை மன்னித்து, கழுவி சுத்திகரித்து, உங்கள் தொழிலை செழிக்க அநுக்கிரகம் செய்யும்"** என்றேன். அதில் நான்கு பெரியவர்கள் **"அதெல்லாம் நடக்கவே நடக்காது"** என்று சவால் விட்டார்கள். நான் சிரித்துக் கொண்டே **"இயேசுவின் அன்பு ஒரு கடல் போன்றது. அந்த அன்பு உங்களை தொடும். நீங்கள் எல்லோரும் அந்த ஆலயத்தில் அங்கத்தினராக மாறுவீர்கள், இது நடக்கும்"** என்றேன். குறிப்பிட்ட ஒரு வீட்டிற்கு மாத்திரம் நானும் எனது உதவியாளரும் சென்று அந்த வீட்டின் தலைவர் சம்மதத்துடன் அங்கிருந்த மதுபாட்டில்களை எடுத்து உடைத்து போட்டோம். நாட்கள் கடந்தது, சுமார் ஆறு மாதம் கழித்து நான் மீண்டும் அந்த நாட்டிற்கு செல்லும் பொழுது அத்தனை பேரும் இயேசுவை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு மதுபான பழக்கத்தை விட்டு விட்டு, இயேசுவின் சீடர்களாய் மாறியிருந்தனர். அவர்கள் எல்லாருடைய வீட்டிலும் மிகுந்த சந்தோஷம் உண்டானது. எவ்வளவு ஆச்சரியமான காரியம்! ஆம் பிரியமானவர்களே! சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் சுவிசேஷத்தை அறிவிக்க

வேண்டியது நம்முடைய கடமை. அன்பினால் அதை செய்யும் பொழுது கேட்போருடைய குடும்பங்களில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அது கொண்டு வரும். நீங்கள் விசுவாசித்தால் இதே போன்ற காரியத்தை உங்கள் மூலமாகவும் கர்த்தர் செய்வார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

**நமது ஊழியத்தின் மூலமாக கிராமங்கள் தோறும் ஊழியம் செய்யவும், வீடுகளை சந்திக்கவும் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். ஊழியத்தில் ஆர்வமுள்ளவர்கள், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் இருப்பீர்களானால் எங்களை அணுகுங்கள். உங்களுக்கு முறையான பயிற்சி கொடுத்து அதன்பிறகு எங்கள் ஊழியத்தின் மூலமாக ஊழியப் பணிகளுக்கு உங்களை அனுப்புகின்றோம்.**



## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.


தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

# மறுபெயர்கள்



**உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!**
**நாள் முழுவதும் அது என் தியானம் – சங்கீதம் 119:97**

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு முதலாவது அவர்களின் இயற்பெயரையும், இரண்டாவது அவர்களின் மறுபெயரையும் சரியாக எழுதுங்கள்**

**உதாரணம்: ஜாதிகளுக்கு தாயானவள்**

**பதில் : சாராய், சாராள்**

1. பலி பீடத்தை தகர்த்தவன்
   ................................................................................,
   ................................................................................
2. அவனிடத்தில் கர்த்தர் அன்பாய் இருந்தார்
   ................................................................................,
   ................................................................................
3. தேசம் முழுவதுக்கும் அதிகாரி
   ................................................................................,
   ................................................................................
4. சிவப்பான கூழ்
   ................................................................................,
   ................................................................................
5. சிறியதகப்பனாய் இருந்தவன், ராஜாவாக்கப்பட்டான்.
   ................................................................................,
   ................................................................................
6. விசுவாசிகளுக்கு தகப்பன்
   ................................................................................,
   ................................................................................
7. தேசத்தை சுற்றிப் பார்க்க அனுப்பப்பட்டவன்.
   ................................................................................,
   ................................................................................
8. அந்த தேசத்தின் ராஜாவின் பெயரை போலவே பெயரிடப்பட்டவன்.
   ................................................................................,
   ................................................................................

9. நற்கிரியைகளை செய்த சீஷி.

.............................................................................................................,

.............................................................................................................

10. சிறிய தகப்பனால் வளர்க்கப்பட்டவள்.

.............................................................................................................,

.............................................................................................................

11. சகோதரரில் விசேஷித்தவர்களில் ஒருவன்.

.............................................................................................................,

.............................................................................................................

12. இவன் தாயின் வீட்டில் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

.............................................................................................................,

.............................................................................................................

13. சீட்டு போட்டு தெரிந்து கொள்ளப்படாதவன். (இவனுக்கு மூன்று பெயர்கள்)

.............................................................................................................,

.............................................................................................................,

.............................................................................................................

14. அலங்கத்தை கட்டினவன்.

.............................................................................................................,

.............................................................................................................

15. ஆறுதல் என்று இவன் பெயர் அர்த்தம் கொண்டது.

.............................................................................................................,

.............................................................................................................

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள். விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

.............................................................................................................

.............................................................................................................

விடைகள் பிப்ரவரி மாதம் 28ஆம் தேதிக்குள் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

முகவரி: அன்பரின் ஊழியம், 10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.

## டிசம்பர் மாத கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. யோசேப்பு, பார்வோன் அரமனையில், பார்வோன், பார்வோனின் ஊழியக்காரரும் (ஆதி.45:16)
2. கர்த்தர் தெரிந்துக்கொள்ளும் ஸ்தானத்தில், பண்டிகையை (உபா.16:15)
3. நன்மை உண்டாக (உபா.30:10)
4. இசக்கார் (உபா.33:18)
5. மீகாள், தாவீதை, சவுல் (1 சாமு.18:20)
6. சிறுமையானவனை, மறைவிடத்தில், ஆபகூக் (ஆபகூக் 3:14)
7. ஆபத்தைக் கேட்டு, தேவரீர் (புலம்பல் 1:21)
8. பெலிஸ்தரின் பிரபுக்கள், சிம்சோன் (நியா.16:23)
9. மாயக்காரனின் (யோபு 20:4-5)
10. சந்தோஷம், ஆலோசனைக்காரருக்கு (நீதி.12:20)
11. எல்லா வீடுகளிலும், முட்செடியும் நெரிஞ்சிலும் (ஏசா.32:13)
12. மணவாளனுடைய, சந்தோஷம், யோவான் (யோவான் 3:29)
13. சமாரியாவிலுள்ள ஒருபட்டணம் (அப்போஸ்.8:5)
14. (1யோவான் 1:4) / (2 யோவான் 1:12)
15. சகல உபத்திரவத்திலேயும், பவுல் (2கொரி.7:4)
16. சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் (2 கொரி.2:3)
17. ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயு. (1கொரி.16:17)
18. ரோதை, பேதுரு. (அப்போஸ்.12:14)
19. பர்னபாவும் பவுலும் (அப்போஸ்.14:14)
20. களிகூருதல் (புலம்பல் 5:15)

## சரியான விடை எழுதி பரிசு பெறும் நபர்களுக்கு என் வாழ்த்துக்கள்

01. Mrs. ஜெலின் ராபின், திருச்சி.
02. Mrs. ஜூலா பிரேம்குமார், அரியலூர்.
03. Mrs. கிரேஸ் வல்லாபாய், செங்கல்பட்டு.
04. Sis. டயனாசாந்தி, கொடைக்கானல்.
05. Bro. வில்சன் தர்மராஜ், தேனி.
06. Mrs. ஜாய் கிறிஸ்டியன், பாளையங்கோட்டை.
07. Bro. செல்வராஜ் சாலமோன், திருநெல்வேலி.
08. Sis. பிளாரன்ஸ் இன்பராணி, தென்காசி.
09. Bro. அசோக்குமார் பிரின்ஸ், தூத்துக்குடி.
10. Sis. டெய்சி எபினேசர், தூத்துக்குடி.



dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

**உங்களின் கனிவான கவனத்திற்கு...**
**தங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பியுங்கள்!**

*அன்பிற்குரிய பங்காளர்களே!*

உங்களைப் பற்றியப் பல புதிய தகவல்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமலேயே உள்ளது. எங்களிடம் உள்ள பதிவேட்டில் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க உள்ளோம். எனவே, தங்களைப் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

1. பங்காளர் பெயர் : ..............................................................................
2. பங்காளர் எண் : ..............................................................................
3. அலைபேசி எண் : ..............................................................................
4. WhatsApp No. : ..............................................................................
5. பிறந்தநாள் : ..............................................................................
6. திருமண நாள் : ..............................................................................
7. இ-மெயில் (e-mail) : ..............................................................................
8. முழு விலாசம் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): ..........................................

..............................................................................

..............................................................................

9. பிற இன்றியமையாத தகவல்கள்: ..............................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சரியாகவும், தெளிவாகவும் இ-மெயில், கடிதம், டெலிகிராம், **WhatsApp No. 95004 87059** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். இவை உங்களை எளிதில் தொடர்பு கொள்ளவும், உங்களின் ஜெபத்தேவை அறிந்து இன்னும் ஊக்கமாய்ஜெபிக்கவும் உதவியாக இருக்கும்.

**இந்தப் பக்கத்தைக் கிழித்தோ அல்லது ஜெராக்ஸ் எடுத்தோ பூர்த்தி செய்து அனுப்பலாம்.**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

அன்புள்ளம் கொண்ட தேவ பிள்ளைகளே!

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்னும் பழமொழியை கேட்டிருப்பீர்கள். அதேபோல யாரோ பெற்று, வளர்க்க முடியாமல் தூக்கி எறியப்பட்ட பிள்ளைகளை நாம் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்து, படிக்க வைத்து, அவர்களுக்கு நல்ல நடத்தையை சொல்லி கொடுக்கும் பொழுது நிச்சயமாய் ஒரு நாள் அவர்கள் அதை மறவாமல் நினைவுகூர்ந்து வாழ்க்கையில் கடும் முயற்சி எடுத்து மேலே வருவார்கள். அப்படி அவர்கள் மேலே வரும் பொழுது நீங்கள் சிறு வயதிலிருந்து அவர்களுக்கு செய்த உதவிகளை போல இப்படிப்பட்ட நற்காரியங்களை மற்ற ஏழை பிள்ளைகளுக்கு செய்யும் அளவிற்கு முன்னேறுவார்கள்.

ஆம் சிறு வயதில் அயர்லாந்தில் பிறந்த 17 வயதான சிறுமி தன்னை, நரபலியாகும் சிறு பிள்ளைகளுக்காகவும், கொடுமைப்படும் பிள்ளை களுக்காகவும் தியாகம் செய்து தன் வாழ்க்கையை அர்ப்பணித்து அவர்களில் ஒருவராக தன்னை கருதி அன்பு செலுத்தி, ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அவர்களை படிக்கவும் வைத்து, நல்ல சுகாதாரத்தில் காத்து, அவர்களுக்கு தேவையான எல்லா வசதிகளும் செய்திராவிட்டால் இன்று ஆயிரக்கணக்கான பிள்ளைகள் அழிந்தே போயிருப்பார்கள். நானும் கூட என் சிறு வயதில் கொலை செய்யப் பட்டிருப்பேன் இல்லையென்றால் கிறிஸ்துவை அறியாதவனாய், உங்களோடு சேர்ந்து இது போன்ற பெரிய உபகாரப் பணியை செய்யாமலும் இருந்திருப்பேன். **"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி. 19:17)** என்று வேதம் சொல்கிறது. நாம் ஏழைகளுக்கு செய்வது ஒரு சிறிய பகுதி, நம்முடைய கரங்கள் சிறியது. ஆனால் கர்த்தருடைய கரங்களோ மிகப்பெரியது. வானத்தையும், பூமியையும், அண்ட சராசரங்களையும் தம் கரத்திற்குள்ளே அவர் அடக்கி வைத்திருக்கிறார். அதிலுள்ள எல்லா பொக்கிஷ சாலையும் அவருக்கு உரித்தானது. எனவே இப்படிப்பட்டதான தர்மத்தை நாம் செய்யும் பொழுது அவருடைய பரந்து, விரிந்த மகா செழிப்பான கரங்கள் உங்களை ஆசீர்வதித்து எல்லா கடன் பிரச்சனையிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும், வியாதிகளிலிருந்தும், சத்துருக்களின் சேஷ்டைகளிலிருந்தும் உங்களை பாதுகாத்து யோபை போல, ஆபிரகாமை போல, போவாஸை போல, கொர்நேலியுவை போல உங்களை ஆசீர்வதிக்கும்.

மேலும், ஜனவரி மாதத்தில் சேலம் மாவட்டம் கலரம்பட்டி, கிச்சிபாளையம், மாசி நாயக்கன்பட்டி, ராமலிங்கபுரம், சேஷன்சாவடி, கருப்பூர் ஆகிய கிராமங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டம் கருக்கம்பாளையம், சேளூர் கந்தம் பாளையம், மல்லிகாபுரம், சின்னகவுண்டம் பாளையம் கிராமங்களில் வாழும் 200 ஏழை மாணவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு போர்வை, பாய், டிபன்கேரியர், குடை, புரோட்டின் மற்றும் மருந்துகளும், நல்ல உணவும், இனிப்புகளும், ஆதரவற்ற பெண்களுக்கு புடவையும் ஏனைய உதவிகளும் வழங்கப்பட்டது. உங்கள் ஜெபத்தாலும், தாராளமான காணிக்கையாலுமே இவ்வுதவிகள்

செய்யப்பட்டது. என்னோடு தோள் கொடுத்து உதவிய உங்களுக்கு என் நன்றியை தெரிவிக்கின்றேன்.

தேவனுக்கு பயந்த எளிமையான ஒரு வாலிபன் இருந்தான். அவன் தினமும் நடந்தே ஒரு கம்பெனிக்கு வேலைக்கு செல்வான். அவனுக்கு கிடைக்கும் வாரக் கூலி மிகவும் குறைந்தது. அதில் தன் பிள்ளைகளையும், மனைவியையும் காப்பாற்றி வந்தான். அவனுக்கு சைக்கிளோ, பைக்கோ, காரோ வாங்குவதற்குக் கூட பணமில்லை. அந்த நாட்களில் அந்த குறிப்பிட்ட நாட்டில் கார், பைக் வாங்குவது மிக மிக எளிதான காரியம். 100 டாலர் இருந்தால் போதும் பைக், 1000 டாலர் இருந்தால் கார் வாங்கிவிடலாம். அவ்வளவு மலிவான விலை. ஆனால் இவனுக்கோ அந்த வசதியுமில்லை. ஒரு நிமிடம் தாமதமாக அவன் கம்பெனிக்கு சென்றாலும் அவனை வேலையை விட்டு நிறுத்தி விடுவார்கள். அவன் வீட்டிலிருந்து கம்பெனிக்கு நடக்கும்பொழுது, சில சமயங்களில் நேரமாகி விடுவதால் ஓடுவான். வழக்கம் போல அந்த பாதையில் அவன் செல்லும்பொழுது சில பிச்சைகாரர்கள் வந்து தர்மம் கேட்பது உண்டு. இவன் அடிக்கடி நினைப்பான், என்னிடமே பணமில்லை, நான் எப்படி இவர்களுக்கு கொடுப்பது என்று. நாட்கள் கடந்தன ஒரு நாள் பனிக் கொட்டுகின்ற நேரத்தில் கிழிந்த கோட் அணிந்து கொண்டிருந்த பெரியவர் இவனை அழைத்து எனக்கு கொஞ்சம் பிச்சை கொடு என்றார். அவன் அதற்கு, உங்களுக்கு கொடுக்கும் அளவிற்கு என்னிடம் பணமில்லை என்றான். பிற்பாடு எனக்கு பசிக்கிறது ஏதாவது உணவு தர முடியுமா? என்றார். உங்களுக்கு உணவு வாங்கிக் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் பணமில்லை என்றான். ஏனென்றால் நானே மாத கணக்கு வைத்துதான் உணவுக்கு தேவையான பொருட்கள் வாங்குவேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றான். கொஞ்ச நேரம் கழித்து திடீரென்று இந்த வாலிபன் திரும்பி வந்தான். அவன் காலையிலே வழக்கமாக சாப்பிடும் பிரட், ஜாம், கொக்கோ கோலா இரண்டு அவனிடம் இருந்தது. அதை அந்த பிச்சைகாரரிடம் **"இது என் உணவு இதில் பாதி உனக்கு கொடுக்கிறேன்"** என்று கொடுத்தான். அப்பொழுது அந்த பெரியவர் இதில் பாதிக்கு மேல் எனக்கு கொடுத்துவிட்டாயே, உனக்கு சாப்பிட என்ன செய்வாய் என்று கேட்டதற்கு, பரவாயில்லை நான் சமாளித்துகொள்கிறேன் என்று கூறிவிட்டு, தன் கம்பெனிக்கு செல்ல புறப்பட்டான். அப்பொழுது பெரியவர் அவனை மீண்டும் சத்தமிட்டு கூப்பிட்டு **"சற்று இரு வாலிபனே, உன்னிடம் இரண்டு காரியங்கள் நான் சொல்ல வேண்டும்"** என்றார். அதற்கு அவன் நீங்கள் சொல்வதை கேட்பதற்கு எனக்கு நேரமில்லை என்றான். அப்பொழுது அந்த பெரியவர் சட்டென்று எழுந்து தான் போட்டிருந்த கிழிந்த கோட்டை கழற்றி தூக்கியெறிந்தார். வாலிபன் திடுக்கிட்டான், உள்ளே அணிந்திருந்த ஆடைகள் அனைத்தும் (டை, கோட், ரிப்பன், பெல்ட்) மிக விலை உயர்ந்தவைகளாகும். பெரியவர் அவனை பார்த்து மகனே! நீ செய்த உதவிக்கு நான் இரண்டு காரியங்களை உனக்கு கொடுக்க வேண்டும். ஒன்று தனது கோட்டின் வலது பாக்கெட்டில் இருந்த தனது கம்பெனி விவர அட்டையை கொடுத்தார். அதை பார்த்தவுடன் அந்த வாலிபன் மீண்டும் திடுக்கிட்டான். ஏனென்றால் அவர் பிச்சைகாரர் அல்ல, மிகப்பெரிய கம்பெனியின் முதலாளி அவர். அவன் ஆச்சரியமாய் அவரை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் மறுபடியும் இடது பக்க கோட் பாக்கெட்டில் தனது கையை விட்டு ஒரு செக் புக்கை (Cheque) எடுத்து, இந்த வாலிபன் பெயரை எழுதி கொடுத்தார். அந்த செக்கில் இருந்த தொகை பல ஆயிரம் டாலர்

மதிப்புள்ள செக்காக இருந்தது. அவன் கொடுத்ததோ 3 டாலர் மதிப்புள்ள உணவு. அவர் கொடுத்ததோ பல ஆயிரம் மடங்கு அதிகம். அந்த பெரியவர் மீண்டும் அவனை பார்த்து, இதை வைத்து கார் வாங்கிக் கொள், ஒரு புதிய வீட்டை வாங்கிக்கொள், உன் பிள்ளைகளை நல்ல பள்ளியில் படிக்க வைத்து கொள் என்றார். மேலும், உனக்கும் உன் மனைவிக்கும் என் கம்பெனியில் நல்ல வேலையை தருகின்றேன் என்றும் வாக்குக் கொடுத்தார். அந்த வாலிபன் சந்தோஷத்தோடு தேவனை துதித்தான்.

ஆம் எனக்கன்பானவர்களே! யாரையும் ஏழைகள் என்றோ அல்லது ஜாதி, இன, மத, மொழி வேறுபாடுகளை வைத்தோ தாழ்வாக நினைக்கவே கூடாது. ஆபிரகாமின் வீட்டிற்கு தேவ தூதர்கள் ஒரு வழிப்போக்கரை போல வந்தார்கள். ஆபிரகாம் அவர்களை வரவழைத்து உபசரித்தான். எனவே, நாம் மனதார, உற்சாகத்துடன் கர்த்தருடைய ஊழியங்களுக்கு, ஏழைகளின் நலனுக்காக உதவி செய்வோம். அப்பொழுது இந்த வாலிபனை அந்த பெரிய கம்பெனியின் முதலாளி ஆசீர்வதித்தது போல உங்களையும் தேவன் ஆசீர்வதிப்பார்.


**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

**எமது YouTube சேனல்களை Subscribe செய்யவும்**


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

**Ministry of Jesus**
**WhatsApp No. 95004 87059**

# ஜனவரி மாதம் செய்த அறப்பணிகள்





நம்மிடம் உதவிபெற்ற ஏழை குழந்தைகள்







குழந்தைகளின் சிறப்பு நடன நிகழ்ச்சி

# S.J.S.T. HOSPITAL கிராமப்புற மருத்துவ சேவை மையம்

கிராம மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நமது மருத்துவமனையில் அநேக ஏழை நோயாளிகள் சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பி உள்ளனர். இன்னும் நமது மருத்துவமனை மூலம் நாம் செய்யவேண்டிய பணிகள் ஏராளம் உண்டு. நமது மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கமும், பிரசவ அறையும் கட்ட வேண்டியுள்ளது. தேவன் தாமே தேவைகளை சந்திக்கவும், வருகிற ஒவ்வொரு நோயாளிகளும் சுகத்துடன் திரும்பிப்போகவும் ஜெபியுங்கள். நாம் எப்பொழுதும் பிறருடைய நலனுக்காக ஜெபிப்போம்! அப்பொழுது கர்த்தர் நம்முடைய நலனையும், குடும்பத்தினரையும் பொறுப்பெடுத்துக் கொள்வார்.

**வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள் எப்பொழுது உம்மை வியாதியுள்ள வராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.**

**அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் - மத்தேயு 25 : 34-40**

மருத்துவமனை பணிகள் தொடர்ந்து பெருகி வளரவும், நல்ல அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் இதில் இணைந்து உதவி செய்யும்படியும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## வாசகர்கள் கவனத்திற்கு

இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசகர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : **96553 18991**

வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.

## தேவை

அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விண்ணப்பிக்கவும்.






★ வாஷிங்டன் சர்வதேச விண்வெளி நிலையத்தி லுள்ள உள்ள வீரர்கள் அங்கிருந்தபடி பளிச்சிடும் இமயமலையினை படம் எடுத்துள்ளனர். அப்புகைப் படம் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோரை கவர்ந்துள்ளது.

★ உலகின் மிகப்பெரிய மலைத்தொடர்களில் ஒன்று இமயமலை இந்திய மற்றும் யூரேசிய டெக்டோனிக் தட்டுகளின் ஐந்து கோடி ஆண்டு கால மோதலின் விளைவாக உருவானது. இம்மலைத் தொடர் சர்வதேச விண்வெளி நிலையம் இமயமலைக்கு மேலே சுற்றி வந்த போது அங்குள்ள வீரர் ஒருவர் இந்த அரிய காட்சியை புகைப்படமாக எடுத்துள்ளார். இதனை நாசா தங்களின் சமூக ஊடக பக்கங்களில் பகிர்ந்துள்ளது.

★ இப்படம் குறித்து நாசா கூறியுள்ளதாவது. பனி மூடிய இமயமலை இந்த படத்தில் அற்புதமாக உள்ளது. படத்தின் வலதுபுறத்தில் வட இந்தியா மற்றும் பாகிஸ்தானின் விவசாய வளமிக்க பகுதி உள்ளது. படத்தின் இடதுபுறம் உலகின் கூரை என்று அழைக்கப்படும் திபெத்திய பீட பூமி வறண்டு காணப்படுகிறது. இந்தியாவின் புதுடில்லி மற்றும் பாகிஸ்தானின் லாகூர் ஆகியவற்றின் பிரகாசமான நகர விளக்குகளும் தெரிகின்றன. வளிமண்டல துகள்கள் சூரிய கதிர்வீச்சுக்கு வினைபுரிந்து ஒளிரும் ஆரஞ்சு நிறம் ஏற்பட்டுள்ளது இவ்வாறு கூறியுள்ளனர்.

---

★ பெற்றோர் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய மிகப்பெரிய கல்வி தன்னம்பிக்கை தான். தன் மீது நம்பிக்கை கொள்வது எப்படி என குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து, பிற்காலத்தில் தன்னை காத்து வந்த பெற்றோர்கள் இல்லா விட்டாலும், பணமோ பிற சொத்துக்களோ இல்லா விட்டாலும், தன்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் இழந்து விட்டாலும், தன்னம்பிக்கை இருந்தால் ஒரு குழந்தை மீண்டும் அனைத்தையும் பெற்று பிழைத்துக் கொள்ள முடியும்.

★ பெற்றோர்கள் குழந்தைகளின் நம்பிக்கையை தகர்க்கும் வகையில் உன் வகுப்பில் படிக்கும் பையன் என்னவெல்லாம் செய்கிறான். நீ தண்டம் என்று தன் குழந்தையை திட்டுவது குழந்தையின் தன்னம்பிக் கையை உடைக்கும் சுத்தியல் அடியாகும். பின் நாளில் குழந்தையே ஏதேனும் சாதிக்கலாம் என நினைத்தாலும் முடியாமல் போய்விடுகிறது.

★ குழந்தைகளிடத்தில் எதிர்மறையாகப் பேசுவதை முழுமையாக நிறுத்த வேண்டும். "நீ இப்படித்தான் தோல்வியடைவாய் என்று எனக்கு முன்பே தெரியும்" என்பது போன்ற பேச்சுக்களை தவிர்த்துவிட்டு "இன்னும் கொஞ்சம் கடினமாக உழைத்து பயிற்சி செய்தால் வெற்றி பெறுவாய்" என்று சொல்வது நல்லது. எப்படி பயிற்சி செய்ய வேண்டும். என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றெல்லாம் பெற்றோர் குழந்தைக்கு செய்து காட்டுவது மிகவும் நல்லது.

★ வெற்றியோ தோல்வியோ எது நடந்தாலும் செய்யும் காரியத்தை விட்டுவிடக் கூடாது. தொடர்ந்து செய்து கொண்டே இருப்பதே ஒருவரை திறமைசாலி களாக மாற்றும் என்பதை எடுத்துக் காட்டுகளுடன் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். தன்மீதான நம்பிக்கை தனக்காக செய்யும்போது தான் அதிகரிக்கும். அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி குழந்தைகளின் தன்னம்பிக் கையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுவது நல்லது



★ இங்கிலாந்தில் லிங்கன்ஷயரில் நடந்த அகழ்வாய்வில் இரண்டு இரும்புக்கால எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த எலும்புக் கூடுகள், நேவன்பை என்னும் இடத்துக்கருகில் தனித்தனி அகழ்வாய்வுப் பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்டன. ஒரு தண்ணீர் குழாய்த் திட்டத்துக்கான முன் தயாரிப்புப் பணிகளின் போது இந்த எலும்புக் கூடுகள் கிடைத்தன. இதனோடு சிறு கட்டடங்கள் மற்றும் பானைகளின் உடைந்த பாகங்களும் கிடைத்திருக்கின்றன. இந்த கண்டு பிடிப்புகள் இந்த பகுதியின் கடந்த காலத்தைக் குறித்து, அகழ்வாய்வாளர்கள் இன்னும் நிறைய தெரிந்துகொள்ள உதவும் என ஆங்லியன் வாட்டர் நிறுவனத்தின் தொல்பொருட்கள் மதிப்பீட்டாளரான ஜோ எவரிட் கூறினார். 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய பழங்கால/பாஸ்ட் /புட் கடை கண்டுபிடிப்பு ஆஸ்டெக் பேரரசின் பழங்கால மண்டை ஓட்டு கோபுரம் அகழாய்வில் வெளிவந்தது இரும்புக் காலம் என்பது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 800 (கி.மு.) முதல் ரோம் நகரத்தின் படையெடுப்பு நடந்த 43 கி.பி. காலத்தையும் உள்ளடக்கியதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



**வல்லமையுள்ள ஜெபங்கள்**

**நமது வலைதலம்**

**www.ministryofjesus.in**

**மற்றும் Dr jane Joshua**

**YouTube Channel-ல்**

**கண்டுமகிழுங்கள்**

**சுவிசேஷம்- Gospel**

**எளிதாக இயேசுவை பற்றி சொல்ல**

**உதவிடும் காணொளி**

**ஆங்கிலம் மற்றும் தமிழிலில்**

**நமது YouTube Channel**

**Ministry of Jesus - dr anandastira**

**கண்டு மகிழுங்கள்**

**அநேகருக்கு பகிர்ந்திடுங்கள்**



**ஊழியப் பாதையில் கர்த்தர்**

**செய்த வல்லமையான சாட்சிகள்**

**நமது Youtube & Website-ல்**

**காணத்தவறாதீர்கள்**

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருநெல்வேலியில்
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
நாள்
பிப்ரவரி 13
(சனிக்கிழமை)

நாகர்கோவிலில்
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
நாள்
பிப்ரவரி 20
(சனிக்கிழமை)



இடம் : பாலா ஹால்
ஊசி கோபுரம் சர்ச் எதிரில்,
வசந்த் அன்கோ அருகில்,
திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை.

தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா
காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

இடம் : அபிஷேக் பில்டிங்,
மெத்தை கடை மாடி,
W.C.C. சந்திப்பு,
நாகர்கோவில்.

குறிப்பு : அன்பரின் ஊழிய பங்காளர்களை தனித்தனியாக சந்தித்து
விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு : (0431) 2765386 & 9488845627

விரைவில்
புத்தம்
புதிய டான்ஸ் ஆல்பம்
நடன நிகழ்ச்சிகள் அனைத்தையும்
சேர்த்து தொகுத்து வழங்குகிறோம்
நமது யூட்யூப் & வலைதலங்களில்
கண்டுமகிழுங்கள்
www.ministryofjesus.in
Youtube : Ministry of Jesus - Dr.Ananda Stira

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:2 பிப்ரவரி 2021 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:7 ISSUE NO:2 February 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

